Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Pc Paradise

நியாயமான விலையில் தரமான கணனிகளையும் கணனி உதிரிப் பாகங்களையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

Pc Paradise

இல. 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(பெருமாள் கோவில் அருகில்)

TP No. 0777-271220

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 23 (28.12.2002) சனிக்கிழமை இதழ் : 88

## சிபாலின் அழைப்பின் பேரிலேயே சந்தகிரி இந்தியாவுக்கு சென்றார்!



(கொழும்பு)

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பது குறித்து, இந்திய - இலங்கைக் கடற்படைத் தளபதிகள் கூட்டாக ஆராய்ந்து வருகின்றனர்.

தற்போது, இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் இலங்கையின் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, இந்தியக் கடற்படைத் தளபதி மற்றும் கடற்படையின் உயரதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து மேற்படி விடயம் குறித்துப் பேச்சுக்கள் நடத்தி வருகின்றார்.

அண்மையில், இலங்கைக்கு விஜயம் செய்த சமயம் இந்திய வெளியுறவுச் செயலர் கன்வர் சிபால் மேற்படி விடயம் குறித்து, ஏற்கனவே இலங்கை ஜனாதிபதியுடனும் படைத்தளபதிகளுடனும் பேச்சுக்களை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயம் நீக்கப்படக்கூடாது

### ஜனாதிபதியின் பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் பாதுகாப்பு வலயங்கள் தொடர்ந்தும் இருக்கும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளதாக அவரது ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, பாதுகாப்பு உயர் மட்டத்தினருடன் ஜனாதிபதி தொடர்பு கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் ஆயுத பாணி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# உயர் பாதுகாப்பு வலயம்; அரச மட்டத்தில் ஆராய்வு!

## மாரப்பன—ஒஸ்ரின் விரைவில் சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)

**உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக இராணுவத் தரப்பால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளதையடுத்து, அரச மட்டத்தில் இது தொடர்பாகப் பரிசீலனை செய்யப்பட்டுவருகின்றது.**

அடுத்த கட்டச் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்பாக, பாதுகாப்பு வலயம் தொடர்பான தீர்க்கமான ஒரு முடிவை எட்டும் பொருட்டு, அரச தரப்பில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு கட்டமாகப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் மீள்குடியேற்றம் தொடர்பாக நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் வெளியிட்ட அறிக்கை குறித்து அவரிடம் கேட்கப்பட்டபோது, இது பற்றித் தற்போது தம்மால் கருத்து எதுவும் கூறமுடியாது என ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்தார். இராணுவத் தரப்பால் பாதுகாப்பு வலயம் குறித்து வெளியிடப்பட்ட உத்தேசத் திட்டம் தொடர்பாகத் தாம் பாதுகாப்பு அமைச்சரைச் சந்தித்துப் பேசிய பின்னரே இதுபற்றிக் கருத்து தெரிவிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

## ரியூட்டறிக்கு சென்ற சிறுமி கிணற்றில் சடலமாக மீட்பு!

(உரும்பிராய்)

உரும்பிராயில் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்குப் படிக்கச் சென்ற சிறுமி ஒருவர், மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை வகுப்புக்குச் செல்வதற்காக வீட்டிலிருந்து புறப்பட்ட துரைசிங்கம் துவாரகா (வயது-10) என்ற சிறுமி மீண்டும் வீடு திரும்பவில்லை.

மாலை 4 மணியளவில் உரும்பிராய் சந்திரோதயா பாடசாலைக் கிணற்றிலிருந்து மேற்படி சிறுமியின் சடலம் மீட்கப்பட்டிருக்கிறது. பிரேத பரிசோதனைக்காக இச்சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றது.

(78)

### இறப்பர் கூட்டுத்தாபன நிதிமோசடி

## ஜனாதிபதியை விசாரிக்க சி.ஐ.டியினர் முயற்சி?

(கொழும்பு)

இறப்பர் கூட்டுத்தாபன நிதி மோசடி தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்ட குற்றப்புலனாய்வுத் துறையினர் அடுத்த கட்டமாக ஜனாதிபதி சந்திரிகாவையும் விசாரிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

900 மில்லியன் ரூபா நிதி மோசடி தொடர்பாக, முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை ஏற்கனவே குற்றப் புலனாய்வுத்துறையினர் விசாரித்திருந்தனர். இவ் விசாரணையின்போது, இறப்பர் கூட்டுத்தாபனத்திற்கான நிதியை ஜனாதிபதியே ஒதுக்கீடு செய்ததாகவும் இது தொடர்பான அமைச்சரவை ஆவணங்களை அவரே சமர்ப்பித்திருந்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகளை யூ.என்.எச்.சி.ஆர். கண்காணிக்கும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான பணக் கொடுப்பனவு செய்யும் நடவடிக்கையை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கண்காணிக்கும்.

மேற்படி கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இந்த நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

உலக வங்கி மற்றும் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் நிதியைப் பயன்படுத்தியே மேற்படி பணக்கொடுப்பனவு செய்யப்படவுள்ளது. எனவே இக் கொடுப்பனவில் முறைகேடுகள் நடப்பதை முன் கூட்டியே தடுக்கும் நோக்குடன் இக் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரியவருகிறது. (க)

## மணலாறில் கைதான சிப்பாய் கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்

(கிளிநொச்சி)


மணலாறுப் பகுதியில் ஆயுதத்துடன் ஊடுருவிய இராணுவச் சிப்பாய் ஒருவரை விடுதலைப்புலிகள் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இச்சிப்பாய்க்கு தமிழீழ நீதிமன்றம் தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த 24ஆம் திகதி மணலாறில் உள்ள விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஆயுதங்களுடன் ஊடுருவிய இராணுவச் சிப்பாய் ஒருவரே அப்பகுதியில் கடமையில் இருந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாய் பின்னர் தமிழீழக் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



**பிள்ளையளை படிக்க அனுப்பிறதுக்குமெல்லே இப்ப பயமாக்கிடக்குது...**

## வானொலிக்கான கருவிகளை புலிகள் வரிசெலுத்திப் பெற்றனர்

### அரச ஊடக மையம் அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வானொலி உபகரணக் கொள்வனவு தொடர்பாக அரசாங்க ஊடக மையம் நேற்று உத்தியோகபூர்வ அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது. வானொலி உபகரணக் கொள்வனவு தொடர்பாக, நோர்வே அரசாங்கம், விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் மத்தியஸ்தம் வகித்ததாகவும், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகச் செயலாளர் புலித்தேவன் இலங்கை ஒலிபரப்புச் சட்டத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வமாக இலங்கை அரசாங்கத்திடம் விண்ணப்பித்திருந்தார் எனவும், மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது விண்ணப்பத்தினை உரிய முறையில் ஆராய்ந்தே ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்கார் அனுமதியை வழங்கியிருந்தார்.

அதேவேளை- பாதுகாப்பு அமைச்சு உபகரணங்களைப் பரிசீலனை செய்து அனுமதி வழங்கியிருந்தது.

விடுதலைப் புலிகள் சுங்க இலா

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## 150ஆவது ஆண்டு நிறைவு

**1852 - 2002**

**இரண்டாம் நாள் 28.12.2002 சனிக்கிழமை**

அமரர் E.C.A.நவரட்ணராசா அரங்கு

**காலை நிகழ்வு மு.ப. 10.00 மணி**

*தலைமை* : திரு.வி.பொன்னம்பலம்
*(தலைவர், பழைய மாணவர் சங்கக் கிளை, கொழும்பு)*
*பிரதம விருந்தினர்* : கலாநிதி கருணசேன கொடித்துவக்கு
*(மனிதவள அபிவிருத்திக் கல்விக் கலாசார அமைச்சர்)*
*சிறப்பு விருந்தினர்* : திரு.அ.தில்லைநடராஜா
*(மேலதிக செயலாளர், கல்வி அமைச்சு)*
*கௌரவ விருந்தினர்கள்*: திரு.வீ.இராசையா
*(பதில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்)*
திரு.என்.ஜெயரட்ணம்
*(வடபிராந்திய பிரதித் தபால்மா அதிபர்)*
திரு.யு.பி.விஜயக்கோன் *(முன்னாள் அமைச்சர்)*
திருமதி இ.புலேந்திரன் *(முன்னாள் அமைச்சர்)*

### நிகழ்ச்சி நிரல்

* *விருந்தினர்களை வரவேற்றல்*
* *மங்கள விளக்கேற்றல்*
* *இறைவணக்கம்*
* *வரவேற்புரை* : திரு.ந.சிவகடாட்சம் *(அதிபர்)*
* *ஆசியுரை* : சுவாமி சித்ரூபானந்தா
*(ஸ்ரீ சாரதா ஆச்சிரமம், பருத்தித்துறை)*
வணபிதா. ஜெ.ஜெபரட்ணம்
*(புனித மரியாள் தேவாலயம், கோப்பாய்)*
* *தலைமையுரை*
* *ஞாபகார்த்த முத்திரை வெளியீடு:*
* *விருந்தினர் உரை:*
* *நன்றியுரை* : திரு.எஸ்.கே.தங்கவடிவேல்
*(விழாச் சபைச் செயலாளர்)*
* **பட்டிமண்டபம்**

**''மகிழ்வான வாழ்வுக்கு அவசியமானது போதுமான பணமா? புரிந்துகொள்ளும் மனமா?''**

நடுவர்: திரு.ந.விஜயசுந்தரம்
*(ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி)*

அணியினர்

**போதுமான பணமே!**
திரு.ச.லலீசன் *(ஆசிரியர், புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி)*
திரு.மு.சிவப்பிரகாசம் *(ஆசிரியர், அக்கராயன் மகா வித்தியாலயம்)*
திரு.நா.விஜயகுமார் *(ஆசிரியர், புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி)*

**புரிந்துகொள்ளும் மனமே!**
திரு.தி.செல்வமனோகரன் *(மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்)*
திரு.ப.கணேசன் *(ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)*
திரு.அ.காந்தரூபன் *(பிரதேச செயலக உத்தியோகத்தர், கோப்பாய்)*

**மாலை நிகழ்வு பிற்பகல் 4.00 மணி**

*தலைமை* : திரு.ந.சிவகடாட்சம் *(அதிபர்)*
*பிரதம விருந்தினா* : திரு.து.வைத்திலிங்கம்
*(மேலதிக அரச அதிபர், யாழ், மாவட்டம்)*
*சிறப்பு விருந்தினர்* : திரு.க.கேதீஸ்வரன்
*(பிரதேச செயலாளர், கோப்பாய்)*
*கௌரவ விருந்தினர்கள*: திரு.சி.தமிழ்மறவன்
*(அரசியற்துறைப் பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப் புலிகள், வலிகாமம்)*
திரு.G.T.ஞானசேகரவேல்
*(பழைய மாணவர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்)*

### நிகழ்ச்சி நிரல்

* *மங்கள விளக்கேற்றல்*
* *இறைவணக்கம்*
* *மங்கள இசை* : இருபாலையூர் நா.பாலசுப்பிரமணியம் குழுவினர்.
* *வரவேற்புரை* : திரு.எஸ்.கே.தங்கவடிவேல் *(செயலாளர், விழாச் சபை)*
* *ஆசியுரை* : திரு.ப.சண்முகராசக்குருக்கள்
*(பிரதமகுரு, பலானை கண்ணகை அம்மன் ஆலயம்)*
போதகர் திரு.ஈ.ஏபிரகாம் *(கானான் தேவாலயம், இருபாலை)*
* *வாழ்த்துரை* : திரு.வீ.சோமசுந்தரம்
*(பழைய மாணவர், இளைப்பாறிய பிரதி அதிபர்)*
* *தலைமையுரை:*
* *கலைஞர் கௌரவிப்பு*
*நாடகக் கலைஞர்கள்* : திரு.வே.மகாலிங்கம்
திரு.எஸ்.பாலசிங்கம்

**பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்**

* *நன்றியுரை* : திரு.யோசப் தாவீது
*(உபசெயலாளர், விழாச்சபை)*

### கலை நிகழ்ச்சிகள்

* *குழு இசை* : கல்லூரி மாணவிகள்
* *இசையரங்கு* : செல்வி சுதர்சினி கந்தசாமி B.A.
* *நடன அரங்கு* : செல்வி தர்சினி தர்மகுலசிங்கம்
*(நாட்டியக் கலைமணி - யாழ். பல்கலைக்கழகம் அவர்களின் மாணவிகள் வழங்கும் நடன நிகழ்ச்சி)*
* *நாடகம்* : திரு.சி.லட்சுமிபுத்திரன் அவர்களின் பிரதியாக்கம், நெறியாள்கையில் உருவான சுதேசிய கலாமன்றம் வழங்கும் **''வீரத்தின் விளைநிலம்''**
* திரு.எஸ்.பாலாவின் நெறியாள்கையில் கலைக் கல்லூரி மாணவர்கள் வழங்கும்
**''தர்மத்தின் சிம்மாசனம்''**

**அணிசெய் கலைஞர்கள்**
*மங்கள இசை வழங்குவோா:*
இருபாலையூர் நா.பாலசுப்பிரமணியம் குழுவினர்
*நா்தசுரம்* : திரு.S.V.முருகையா, திரு.S.ரமேஸ்
*தவில்*: திரு.நா.பாலசுப்பிரமணியம், திரு.மு.கண்ணன்

இசை, நடன அரங்கில் அணிசெய் கலைஞர்கள்
*மிருதங்கம* : திரு.க.சத்தியதாஸ்
*வயலின்* : திரு.அ.ஜெயராமன்
*பாட்டு* : திருமதி ம.சுப்பிரமணியம்
திருமதி ம.சிவயோகநாதன்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**அமைப்புக் குழுவினர்,**
**150ஆவது ஆண்டு விழாச் சபை.**

**கல்லூரியை வாழ்த்துகின்றோம்.**
1. பழைய மாணவர்கள், பிரதேச செயலகம், கோப்பாய்.
2. காளி கோயிலடி சனசமூக நிலையம், கோப்பாய் மத்தி.
3. கோப்பாய் வடக்கு சனசமூக நிலையம்.
4. வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலையம்.

(சி-364)

# வட-கிழக்கில் தென்னை மீள் நடுகைக்கு அரசாங்கம் ஐந்துவருட செயற்திட்டம்

(நமது நிருபர்)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தினால் அழிந்து போன தென்னை மரங்களுக்குப் பதிலாக தென்னம் நாற்றுக்களை மீள்நடுகை செய்வதற்கான ஐந்து வருடத்திட்ட மொன்றை பெருந்தோட்டத்துறை அமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளது.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களில் 20 ஆயிரத்து அறுநூறு ஏக்கர் பரப்பளவிலான தென்னை மரங்கள் அழிந்து போயுள்ளன. இவற்றுக்குப் பதிலாக புதிய மரங்களை ஈடுசெய்ய, மீள்நடுகை செய்ய வேண்டியுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஐந்து வருடத் திட்டத்தின் அடிப்படையில் இம்மீள்நடுகை ஆரம்பிக்கப்படும்.

அதற்கு முன்னதாக முன்னர் தென்னை மரங்கள் இருந்த பகுதிகளின், தென்னைகளின் அடிப்பாகத்தை மண்ணில் இருந்து அகற்ற வேண்டியுள்ளது. இதற்கென விசேட கருவிகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் லக்ஷ்மன் கிரிபெல்ல மேலும் தெரிவித்தார்.

## புதிய ஜனநாயகக் கட்சியின் பகிரங்கக் கருத்தரங்கு

**"சமாதான முன்னெடுப்புக்களும் எதிர்நோக்கும் சவால்களும்"**

இடம் : சிற்றிஹோல் மண்டபம், ஜும்மாப் பள்ளிவாசல் ஒழுங்கை, (வின்சர் சந்திக்கு அருகாமை)
காலம் : 29.12.2002 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி
தலைவர் : தோழர் இ.தம்பையா *சட்டத்தரணி,*
(தேசிய அமைப்பாளர் புதிய ஜனநாயகக் கட்சி)
கருத்துரைகள் : ரூனா மரியா பியரிக்
(நோர்வேத் தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சி (AKP)
தோழர் சி.கா.செந்தில்வேல்
(பொதுச் செயலாளர், புதிய ஜனநாயகக் கட்சி)
தோழர் சோ.தேவராசா (சட்டத்தரணி)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**புதிய ஜனநாயகக் கட்சி,**
**வடபிரதேசம்.**

24.12.2002 (074)

## சிறு விளம்பரம்

### தேவை

வாடிக்கையாளர் நிறுவனம் ஒன்றிற்கு ஆங்கிலம் பேசத் தெரிந்த (வயதெல்லை 30-50 வரை) காரியாலய அனுபவமுடைய பெண் ஒருவர் காரியாலயப் பொறுப்பாளர் பதவிக்கு தேவை. விண்ணப்பிக்கவும்.

**எம்.இராஜநாயகம் அன் கம்பனி,**
140, பலாலி வீதி, திருநெல்வேலி
(பரமேஸ்வராச் சந்தி)
T.P. No: 2222478 (077)

## யாழ்ப்பாணக் கோட்டக்கல்வி அதிகாரி பதவிக்கான விண்ணப்பம்

தைமாதத்தில் இருந்து வெற்றிடமாகவிருக்கும் மேற்படி பதவிக்கு யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து வீண்ணப்பம் கோரப்படுகின்றது. இப்பதவி இலங்கை கல்வீ நிர்வாக சேவை தரம் III க்குரியதாகும். இலங்கை கல்வீ நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களிடம் இருந்து வீண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சுயவீபரங்கள் உள்ளடக்கிய சுயமாகத் தயாரிக்கப்பட்ட வீண்ணப்பங்களை 31.12.2002 ஆந் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாண வலயக் கல்வீப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவும்.

**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**
27.12.2002. (சி-370)

**ராஜா** யாழ்ப்பாணம்.
எம்.ஜி.ஆர்., ராதா சலூஜா நடித்த
**இதயக்கனி**
10.30, 2.30, 6.30
(சி-262)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
11.00, 2.45, 6.00 (பு.நே)
சரத்குமார், நெப்போலியன், தேவயானி நடித்த
**தென்காசிப்பட்டணம்**
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45
(பு.நே)மட்டும் JACKION நடித்த
**SHAFT**
(சி/287)

**புது வருடத்தை முன்னிட்டு சிறப்புத் தள்ளுபடி!**
31.12.2002 வரையுமே
தரமோ உயர்வு! விலையோ மலிவு!!
**லலிடன் புடவை நிலையம்**
புதுவருடத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமைகளிலும் முழுநேர விற்பனை நடைபெறும்.
(பஸ் நிலையம் முன்பாக)
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.-2222381
(சி-369)

*எங்கள் அன்பு வாடிக்கையாளர்களுக்கு!*

கடந்த 44 வருடகாலமாக கல்விக்காகச் சேவையாற்றிவரும் நாங்கள், யாழ். நகரில் ஒரே கூரையின் கீழ் சகலவிதமான பாலர் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரை உபயோகிக்கும் புத்தகங்கள், தமிழ், ஆங்கில நூல்கள் , வாழ்த்து மடல்கள், நாட்குறிப்பேடு, நாட்காட்டி, பாடசாலைக்கான கற்றல் - கற்பித்தல் உபகரணங்கள், பாடசாலை உபயோகப் பொருட்கள், புத்தக அலுமாரி (Cupboard), சங்கீத - வாத்திய இசைக் கருவிகள், மாணவர்களின் கல்வி சம்பந்தமான உபயோகப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள், அலுவலக உபயோகப்பொருட்கள், ஆரம்பப் பிரிவு மழலைகளுக்கான கல்வி உபயோகப் பொருட்கள் அனைத்தையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை ஆடர்கள் அனைத்தையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை ஆடர்கள் இலவசமாக பாடசாலைக்கே விநியோகிக்கப்படும்.

**இன்றே விஜயம் செய்யுங்கள்**

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்**

*212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*

தலைமை அலுவலகம:
*A.C.D.I.L.,*
*371, Dam Street,*
*Colombo - 12.*
*T.P No. 434529, 336237,543547*
*Fax.No:- 541099*

கிளை:
புக் சென்ரர்,
இல.05, சென் லூசியஸ் வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13.

*NO.81,*
*Armour Street,*
*Colombo - 13.*

கல்லூரி மாணவர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு நாட்களிலும் விற்பனை நடைபெறும்.
சி/333

# 60 சதவீதமான படையினரை வட - கிழக்கிலிருந்து விலக்குங்கள்

## அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி ரணிலுக்கு கடிதம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் நீடித்து நிலைப்பதற்கு வழிசெய்யுமாறு, அகில இலங்கைப் பொது ஊழியர் முன்னணி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

பிரதமர் ரணிலுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில், மேற்படி தொழிற்சங்கம் மூன்று முக்கிய விடயங்களை நிறைவேற்றுமாறு அரசாங்கத்துக்கு கோரிக்கைவிடுத்திருக்கின்றது.

நாட்டின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தற்போது நிலைகொண்டுள்ள படையினரின் தொகையை, 60 சதவீதத்தால் குறைக்க வேண்டும். எஞ்சிய 40 சதவீதமான படையினரையும் மக்கள் நெருக்கடி மிக்க இடங்களில் இருந்து விலக்கி பொதுவான இடங்களில் நிலைகொள்ளவைக்கவேண்டும்.

போர் நடைபெற்ற பிரதேசங்களில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கப்படைகள் இணைந்து பங்கேற்க வேண்டும்.

ஈ.பி.டி.பியின் குறுக்கீடுகளை தடுத்து நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளையே அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் முன்வைத்திருக்கின்றது. இதன் மூலம் நாட்டில் நீடித்த, நிலையான சமாதானத்தை ஏற் படுத்த முடியும் என அது மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன், இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்குத் தடையாக இருக்கும் விடயங்களுக்கு அரசு தீர்வுகான வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

### தாதிகளுக்கு இன்று நியமனம்

பயிற்சியை முடித்து வெளியேறிய தாதியர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று வழங்கப்படவுள்ளன.

யாழ்.தாதியர் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சியில் சித்தியடைந்தவர்களுக்கான நியமனக் கடிதங்களை இன்று தாதியர் பயிற்சிப் பாடசாலை அதிபரிடம் பெற்றுக் கொள்ளும்படி சகல தாதிய மாணவாகளையும் வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ரா)

### கிணற்றில் வீழ்ந்து பெண் மரணம்

(புத்தூர்)

கிணற்றில் நீர் அள்ளச் சென்ற பெண், தவறிவீழ்ந்து மரணமானார். இச்சம்பவம் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்றது. ஆவரங்காலைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரக் குருக்கள் என்ற 55 வயதான பெண்ணே மரணமானவராவார்.(110)

## திருமலையில் தமிழ் இலக்கிய விழா ‘ஈழத்து இதழியல்துறை’ ஆய்வரங்கு

(திருகோணமலை)

திருகோணமலையில் வடக்குக் கிழக்கு மாகாணசபையின் கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு நடத்தும் தமிழ்இலக்கிய விழா இன்று ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவுள்ளன.

30ஆம் திகதிவரை நடைபெ றும் இவ்விழாவில் பல்வேறு கலை, இலக்கிய நிகழ்வுகளும், விருது வழங்கல் வைபவங்களும் இடம் பெறவுள்ளன.

இவ்விழாவில் ஈழத்து இதழியல் நோக்கு என்ற தலைப்பிலான ஆய்வரங்கு தொடர்ச்சியாக மூன்று நாட்கள் நடைபெறவுள்ளன. தினமும் மாலையில் நடைபெறும் இவ் ஆய்வரங்கில் பேராசிரியர்கள், பத்திரிகைத்துறைசார் புலமையாளர்கள் உள்ளிட்ட பலரும் தமது கட்டுரைகளைச் சமர்ப்பித்து உரையாற்றவுள்ளனர்.

## மகிந்த - தொண்டமான் சந்திப்பு மாற்று அரசாங்கம் அமைக்கும் முயற்சியா?

### அரசியல் வட்டாரங்களில் கேள்வி

(கொழும்பு)



எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஸவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானும் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

மகிந்த ராஜபக்ஸவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் நீடித்துள்ளது. மகிந்த ராஜபக்ஸவின் அழைப்பின் பேரிலேயே தாம் அவரைச் சென்று சந்தித்ததாகவும், இதன் போது பல்வேறு அரசியல் பிரச்சினைகள் குறித்துப் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகவும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.



இச்சந்திப்புக் குறித்து கொழும்பு அரசியல் வட்டாரங்கள், மாற்று அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான பொ.ஐ.முவின் முயற்சியின் முதல் நடவடிக்கையாக இருக்கக்கூடும் எனக் கருத்து வெளியிட்டுள்ளன.

(க)





ரஷ்யாவில் அண்மையில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் மௌன அஞ்சலி செலுத்தப்படுவதை முதல் படத்திலும், அங்கு நடைபெற்ற கலைநிகழ்ச்சியில் சிறுமி ஒருவர் நடனம் ஆடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்

## செய்மதிப்படங்களின் உதவியுடன் இலங்கையில் பெற்றோலிய ஆய்வு

(கொழும்பு)

இலங்கையின் கடற்பரப்பில் பெற்றோலியம் உள்ளதா என ஆராய சக்திவள அமைச்சு செய்மதிப் படங்கள் மூலம் ஆய்வினை மேற்கொள்ளவிருக்கின்றது.

இலங்கையைச் சூழவுள்ள மூன்று இலட்சம் சதுர கி.மீ. பரப்பளவில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும். இப்பகுதியில் பெற்றோலியவளம் உள்ளதா என்பதைச் செய்மதிப் படங்கள் மூலம் ஆய்வு செய்வதற்கு சுவீடனின் ‘பெற்றோஸ்கான்’ நிறுவனம் உதவி செய்யவுள்ளது.

இந்தத் திட்டத்திக்கு இந்நிறுவனம் 3 இலட்சத்து 25 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது. ஆனால், இத்திட்டத்துக்கு மொத்தமாக ஆறு இலட்சத்து 10 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் எனத் தெரியவருகின்றது.

இது தொடர்பான முதல் திட்ட ஆய்வு கடந்த யூலையில் சமர்ப்பிக்கப்பட்டது. இறுதிக்கட்ட ஆய்வு அறிக்கை அடுத்த மாதத்தில் தாக்கல் செய்யப்படும்.

## பாதுகாப்பு வலயத்துள் அமைதிப்படை அமையும்?

(கொழும்பு நிருபர்)

உயர்பாதுகாப்பு வலயங்களில் பணியாற்றுவதற்கென - இராணுவத்தினரும், விடுதலைப் புலிகளும் பங்கேற்கும் அமைதி காப்புப் படையொன்றை அமைப்பது பற்றி, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுடன் ஆராயப்பட்டதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆலோசனை எவரால் கலந்துரையாடப்பட்டது என்பது பற்றி வெளித்தெரியாதபோதும் - படைத்தரப்பிலிருந்தே இந்தப் பிரேரிப்பு முன்வைக்கப்பட்டிருக்கலாம் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (1)

### திருமலையில் திடீரென இறக்கும் கால்நடைகள்

திருகோணமலையில் கால்நடைகளுக்குத் திடீர் நோய் ஏற்பட்டு, நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகள் மரணமடைந்துள்ளன. கந்தளாய், முள்ளிப்பொத்தானை, தம்பலகாமம் ஆகிய பகுதிகளில் சுமார் 150 மாடுகள் இதுவரை மரணமடைந்துள்ளன எனத் தெரியவருகிறது.

## அதாவுல்லா உட்பட எட்டுப்பேரை ஹக்கீம் கட்சியிலிருந்து நீக்கினார்

(கொழும்பு)

அக்கரைப் பற்றில் கட்சியின் கூட்டங்களுக்கு விரோதமாக பேராளர் மாநாட்டைக் கூட்டியமைக்காக, அமைச்சர்கள் அதாவுல்லா, நூர்தீன் மசூர் உட்பட எட்டுப்பேர், கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் அகற்றப்பட்டுவிட்டதாக - அமைச்சர் ரவூப் ஹக்கீம் அறிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடக் கூட்டத்தில் இத்தீர்மானம் அறிவிக்கப்பட்டது.

விரைவில் சம்பந்தப்பட்டோரது அமைச்சர் பதவிகளும் பறிக்கப்பட்டுவிடும் எனவும் ரவூப் ஹக்கீம் அப்போது தெரிவித்தார்.

## முன்னாள் பிரதமர் ரட்னசிறியை பொலிஸார் ஒரு மணிநேரம் விசாரணை

முன்னாள் பிரதமரும் பொ.ஐ.மு நாடாளுமன்ற உறுப்பினருமான ரட்னசிறி விக்கிரமநாயக்காவை குற்றப்புலனாய்வுப் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டில் வைத்து ஒருமணிநேரமாக விசாரணை நடத்தினர்.

இறப்பர் உற்பத்தி ஏற்றுமதி கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற ஊழல் தொடர்பாகவே, இந்த விசாரணை இடம்பெற்றது. 50 கோடி ரூபாவிற்கும் மேல் மோசடி செய்திருந்தாரென ரட்னசிறி விக்கரமநாயக்கா மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. லஞ்சஊழல் ஆணைக்குழு அவரை விசாரணைக்கு அழைத்தபோது அவர் தலைமறைவாகிவிட்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர். அதனையடுத்து அவரைக் கைது செய்வதற்கு பொலிஸார் வலை விரித்திருந்தனர். எனினும், ரட்னசிறி விக்கிரமநாயக்கா குற்றப்புலனாய்வுப் பொலிசாருக்கு, தான் வீட்டில் இருப்பதாக நேற்று முன்தினம் தகவல் கொடுத்திருந்தார். அதனையடுத்தே நேற்று முன்தினம் இரவு விசாரணை இடம்பெற்றது.

விசாரணைகள் முடிவடைந்த பின்னர், இது தொடர்பான அறிக்கை லஞ்சஊழல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் எனக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, இறப்பர் உற்பத்தி ஏற்றுமதிக்கூட்டுத்தாபனத்தில் ஏற்பட்ட ஊழலில் தன்மீது குற்றம் இல்லை எனபதற்கான காரணங்களை விளக்கி, பாராளுமன்றத்தில் அறிக்கை விடவுள்ளதாக ரட்னசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்தார். (200)

# நிரந்தர வைத்தியர் இன்றி சிரமப்படும் பளைப்பகுதி மக்கள்

(பளை)

பளை அரசினர் வைத்தியசாலைக்கு இதுவரை நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படாததால் பளைப் பிரதேச மக்கள் வைத்திய சேவை பெறுவதற்கு மிகுந்த சிரமங்களை அடைகின்றனர்.

தற்பொழுது தனியார் வீடொன்றின் ஒரு பகுதியில் இயங்கி வரும் வைத்தியசாலையில் கடமை புரியும், ஓய்வு பெற்று மீள்நியமனம் செய்யப்பட்டுள்ள வைத்தியர் ச.அம்பிகைபாகன்- திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் மாத்திரம் கடமை செய்கின்றார்.

ஏனைய நாட்களில் வைத்திய சேவை பெறுவதற்கு மக்கள் விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவை நாடிவருகின்றனர்.

மேலும், இப்பகுதியில் அண்மைக் காலமாக அதிகளவானோர் பாம்புக்கடிக்கு உள்ளாகிவருகின்றனா.

இரவுவேளைகளில் பாம்புக்கடிக்கு உள்ளாகும்போது, அவசர சிகிச்சை பெறுவதற்கு அக்கராயன் மற்றும் கிளிநொச்சி ஆஸ்பத்திரிகளையே மக்கள் நாட வேண்டியுள்ளது.

இது போன்று கர்ப்பிணித் தாய்மாரும் இரவு நேரத்தில் பெரும் சிரமத்தை அடைகின்றனர்.

நிரந்தர வைத்தியர் நியமிக்கப்பட்டால் இத்தகைய வசதியீனங் கள் ஏற்படாதென இப்பகுதி மக்கள் கருத்து தெரிவித்துள்ளார். (115)

# பெண்ணுடன் சேஷ்டை குடும்பஸ்தர் பிடிபட்டார்!

## எச்சரித்த பின் விடுவிப்பு

(இளவாலை)

இளவாலைப் பகுதியில் பெண்ணுடன் சேஷ்டை புரிந்த ஒருவர் இளைஞர்களால் பிடிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்ட பின் விடுவிக்கப்பட்டார். இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

ஐம்பது வயது மதிக்கத்தக்க இந்நபர் இரண்டு, மூன்று தினங்களாக குறிப்பிட்ட பெண் போக்குவரத்துச் செய்யும் வீதியில், அவருடன் சேஷ்டை புரிந்து வந்துள்ளார். இச்சம்பவத்தைக் குறிப்பிட்ட பெண் அப்பகுதி இளைஞர்களிடம் தெரியப்படுத்தியதை அடுத்து, அந்நபரைத் துரத்திப் பிடிக்க முற்பட்டபோது, மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடி- பெரியவிளான இராணுவத்தினரிடம் தஞ்சம் புகுந்தார். எனினும், இராணுவத்தினரின் அனுமதியுடன் சந்தேக நபரை விசாரணை செய்தபோது சம்பந்தப்பட்டவர் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்பு கோரியதால் இளைஞர் குழுவினால், இராணுவத்தினர் முன்னிலையில் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பப்பட்டார். (71)

# உரங்களின் விலை உயர்வு பாதிப்படையும் விவசாயிகள்

(புன்னாலைக்கட்டுவன்)

உரவகைகளின் விலை நாளுக்கு நாள் உயர்வடைந்து செலவதனால் விவசாயிகள் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

பருவமழையின் தாக்கத்தால் பயிர்கள் அழிவடைந்துள்ளமையாலும், உரவகைகளின் விலை ஏற்றத்தாலும் விவசாயிகள், விவசாய நடவடிக்கைகளைப் புறக்கணிக்கும் துர்ப்பாக்கிய நிலையும் உருவாகியுள்ளது.

அண்மைக்காலத்தில், 650 ரூபாவுக்கு விற்கப்பட்ட யூரியா உரம் தற்பொழுது 750 ரூபாவாகவும், 900 ரூபாவுக்கு விற்கப்பட்ட அமோனியா உரம் 1000 ரூபாவாக உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்.

HAPPY BIRTHDAY



பெயர் :க.ஜினுஜா
முகவரி:8ஆம் வட்டாரம், நெடுந்தீவு.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்


சிறாரின் பெயர்:--------------------

முகவரி:--------------------

பிறந்த ஆண்டு:--------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரக் கல்லூரி யன் கிறிஸ்தவ மாணவ மன்றத்தின் நத்தார் ஒளிவிழா மற்றும் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மெதடிஸ்த போதகர் எஸ்.சதீஸ் அடிகளார் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இரண் டாம் அணி ஆசிரியப் பயிலுநர்களுக்கான பிரியாவிடை வைபவம் அண்மையில் இடம்பெற்றபோது, விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் சபா.ஜெயராசா, கல்வியியற் கல்லூரிப்பீடாதிபதி கலாநிதி சி.கமலநாதன் மற்றும் விரிவுரையாளர்கள் மேடையில் அமர்ந்திருப்பதனைப் படத்தில் காணலாம். (83)

# தமிழ் மக்களின் வரலாற்றை ஆவணப்படுத்த

# 54 ஆண்டுகள் உழைத்த மாமனிதர் கலைஞானி



மாமனிதர்

குறித்த ஒரு இனத்தின் வரலாற்றை எடுத்தியம்புவதில் தொல்பொருட்களுக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பு உண்டு. அவ்வினம் சார்ந்த மக்களின் வாழ்க்கைமுறை அம்சங்கள்- பிற இனத்துடனான தொடர்புகள் அல்லது உறவுமுறைகள் போன்ற இன்னோரன்ன தகவல்களைத் தருவனவாகவும் அவை விளங்குகின்றன. எமது இனத்தைப் பொறுத்தவரை தொல்பொருட் பாதுகாப்பு மற்றும் ஆவணப்படுத்தல் துறைகளில் அதிகம் ஈடுபாடுகாட்டாமை பெருங்குறைபாடாகவே இருந்துவருகிறது. யுத்தம் காரணமாக எமது வரலாற்றுச் சின்னங்கள் பல அழிக்கப்பட்டு விட்டன. இன்றைய நாட்களில் எஞ்சியிருந்த எமது கலாசார விழுமியங்களைக் காட்டும் கலைச் சின்னங்கள் பலவும் எமது பிரதேசத்தைவிட்டு வெளியேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு யாழ். பல்கலைக் கழக நுண்கலைத்துறைக் கலை வட்டம், விடுதலைப்புலிகளின் கலைப் பாண்பாட்டுக்கழகம் மற்றும் இந்துசமய விவகார அமைச்சு, அரச செயலகம் போன்றவை பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டு வருகின்றன. பொதுமக் கள் மத்தியில் தொல்பொருள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதன் மூலம் எமது பாரம்பரியங்களையும், பணபாட்டையும் கலாசாரக்கூறுகளையும் இன அடையாளங்களையும் இனங்காண வைக்கும் காத்திரமான பணியை அவர்கள் ஆற்றி வருகின்றனர். காலக்கிரமத்தில் யாழ்ப்பாணத்தில் இவற்றைப் பாதுகாபபதற்கு அரும் பொருட்காட்சியகம் ஒன்றும் நிறுவப்பட இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இவையனைத்தும் இத்துறை வளர எடுக்கப்படும் காத்திரமான முயற்சிகளே.

கடந்த காலத்தில் எமது மக்களின் அலட்சியப் போக்கிற்கு மத்தியிலும் 54 வருடங்களுக்கு மேலாக தொல்பொருட் சேகரிப்பில் - தமிழ் மகளின் வரலாற்றை ஆவணமாக்கும் முயற்சியில் தனிமனித தொல் பொருள் நிறுவனமாக செயற்பட்டு வந்தவர் மாமனிதர் கலைஞானி. வாழ்வில் பிரமச்சரியத்தை மேற்கொண்ட அவர் தனது நேரம், பொருள்அனைத்தையும் இப்பணிக்காகவே அர்ப்பணித்துச் செயற்பட்டுவந்ததை எவரும் அறிவர். இதேவேளை, தமிழ்த் தேசியத்தின் கட்டுமானத்திலும் அவர் உறுதியாக இருந்தார். அடக்கி ஒடுக்கப்படும் இனமாக தமிழினம் வாழ்வதை அவர் விரும்பவில்லை. ஆனால், அதற்காக அவர் எந்தக கட்சியினதோ அமைப்பினதோ பின்னணியுடன் செயற்படவில்லை. சலனமற்ற சமுத்திரம் போலவேஅவர் வாழ்வு நகர்ந்தது. மக்களுக்காக வாழ்பவர்களை - போராடுபவர்களை - உழைப்பவர்களை மனதார நேசித்தார். ஆனாலும் அவரின் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ளவோ, அவரின் தேடல்களை ஆவணப்படுத்தவோ எவரும் முன்வரவில்லை. மேலே குறிப்பிட்ட ஒரே குறிக்கோளுக்காகத் தமிழ் மக்களின் வரலாற்றை இந்த மண்ணில் நிலைநிறுத்த வேண்டும் என்று பேரவாக் கொண்டிருந்தார் கலைஞானி.

1991 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் முத்தமிழ் விழாவில் வைத்து வழங்கிய, எமது தேசத்தின் உயர் விருதான 'மாமனிதர்' விருது அவரை வாழும்போது கௌரவித்த ஒரு மிகப் பெரும் நிகழ்வாகும்.

ஈழத்தில் அரும்பொருள் சேகரிப்பில் ஈடுபட்டவர்களில் முதன்மையானவராக கலைஞானி திகழ்தார். பார்த்தால் மிகவும் அமைதியான சுபாவம் கொண்ட கலைஞானி, எவ்வாறு இவ்வளவு பொருடகளையும் சேகரித்து வைத்திருந்தார் என எண்ணத்தோன்றும். ஆனால், அந்த அமைதியின் பின்னால் அவரது உழைப்பிருந்தது.

அரியகுட்டி செல்வரத்தினம் என்ற இயற்பெயரைக் கொண்ட இவர், குரும்பசிட்டி எனும் கலைக்கிராமத்தில் 1933 ஆம் ஆண்டு பிறந்தார். இவரை ஊரில் தியாகன் அல்லது கலைஞானி என்று கூறினாலே தெரியும். அவரது இயறபெயரை விஞ்சி கலைஞானியாகவே அவர் வாழ்ந்து வந்தார். ஆரம்பத்தில் குரும்பசிட்டி பொன பரமானந்தன் வித்தியாசாலையிலும், பின்னர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் கல்வி பயின்றார். சிறு வயதிலேயே தாயையும் தந்தையையும் இழந்த அவர், தனது பெரியதாயாரின் அரவணைப்பிலேயே வளர்ந்து வந்தார். கல்லூரிக் காலத்திலேயே அரும்பொருடகளைச் சேகரிக்கும் ஆர்வம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது.

எமது பண்டைய வரலாற்றை நினைவுறுத்தத்தக்க பல ஆதாரங்களையும் அவர் சேகரித்து வைத்திருந்தார். இதற்கென வல்லிபுரம், கந்தரோடை தெல்தெனியா, புத்துவெட்டுவான், பளம்பாசி, சேமமடு எனப் பல்வேறு இடங்களுக்குச் சென்று பல இடர்களைச் சந்தித்திருந்தும் கூட, பல பொருட்களைச் சேகரித்தார். இதற்கென மனிதச்சுவடுகள் அற்ற பல காடுகளுக்கும் அவர் சென்று வந்தார்.

எந்த விடயத்திலும் மிகவும் ஆர்வத்துடன் செயற்படும் கலைஞானி அரும்பொருட் சேகரிப்பில் மட்டுமல்ல புகைப்படத் துறையிலும் அதிக ஈடுபாடு கொண்டவர். சிறந்த புகைப்படப் பிடிப்பாளரான அவர், யாழ்.நகரில் 'கலை ஞானி புகைப்படப்பிடிப்பு நிலையத்தை' யும் நடத்தி வந்தார். ஓவியம் வரைதல், அச்சுப்பொறிக் கட்டை (BLOCK) தயாரித்தல், றபாசீல் செய்தல், கைரேகை மற்றும் சோதிடம் பார்த்தல் போன்ற பல தொழில்களிலும் அவருக்கு நல்ல பரிச்சயம் இருந்தது. சுதேச வைத்திய அறிவும் பெற்றிருந்தார்.

இவரது சொத்துக்களில் பெரும் பாலானவை சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் அழிக்கப்பட்டன. யாழ்ப்பாணத் திலும் குரும்பசிட்டியிலும் இவர் சேரித்து வைத்திருந்த தேடற்கரிய பல அரும் பொருட்கள் இவ்வாறு அழிவுக்குள்ளாகின. அரும் பொருட் சேகரிப்பு முயற்சிக்காகவே அவர் தனது வாழ்நாளை அர்ப்பணித்தார்.

மண்ணை - பூர்வீகத்தை நேசித்த மாமனிதர் மறைந்து ஓராண்டு பூர்த்தியாகி விட்டது. எமது கடந்த காலப் பாரம்பரியங்களை எடுத்தியம்பும் காட்சிக் கூட மொன்று யாழ்ப்பாணத்தில் உடனடியாக நிறுவப்பட வேண்டியது அவசியமாகும். அதன் மூலம கலைஞானி உள்ளிட்ட தொல் பொருள் ஆய்வாளர்களின் பெயர் நிலைக்கவும் அவர்கள் பற்றிய ஆராயச்சிகள் மேற்கொள்ளபடவும் வழியேற்படும் என்பது குறிப்பிடத்தக்கது

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி

## வார்த்தை விளையாட்டு - 13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பு | | 2 | 3 | | |
| | | ண் | | 4 | ய் |
| 5 | 6 க | | | | |
| | 7 | | 8 | | 9 கா |
| 10 | ம் | | | | |
| | 11 | | னை | | |

முழுப் பெயர் : ..........................................

கற்கும் பாடசாலை : ..........................................

கற்கும் தரம் : ..........................................

முகவரி : ..........................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. படிப்பதற்குப் பயன்படுவது.
4. நித்திரை கொள்வதற்குப் பயன்படுத்தலாம்.
5. நகைச்சுவை.
7. இதைக் கண்டால் படையும் நடுங்கும்.
8. பூவினைத் தாங்கும் தண்டு. (குழம்பியுள்ளது)
10. தளபாடம் செய்யப் பயன்படும் மரம்.
11. கிளையில்லாத ஒரு மரம்.

### மேலிருந்து கீழ்

1. குதிரை.
2. குற்றப்பணத்தை இப்படிச் சொல்லலாம்.
3. சீனி உற்பத்திக்கு ஆதாரமானது.
4. அம்பு.
6. பகுதி, இதன் ஒத்தசொல் குழம்பியுள்ளது.
8. ஒரு மரம்.
9. கரிய பறவை

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேற்காணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில்,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 01-01-2003

சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 12


இல் சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
**சிந்துஜன் ரகுநாதன்**
அரச வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

*2ஆம் பரிசு -*
**இ.கஸ்தூரி**
சிறுவர் இல்லம்,
ஏழாலை.

*3ஆம் பரிசு -*
**சு.சோபியா**
தொட்டிலடி மத்தி,
சண்டிலிப்பாய்.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*




# சிறுவர் அரங்கம்

## நரியும் முதலையும்



ஒரு நரி காட்டு வழியே சென்று கொண்டிருந்தது. வழியின் குறுக்கே ஒரு ஆறு தென்பட்டது. அந்த ஆற்றின் கரையில் முதலை ஒன்று கிடப்பதை நரி கண்டது. முதலையிடம் எப்படி தப்பி ஆற்றை கடப்பது என்று யோசித்தது. நரியைக் கண்டதும் முதலைக்கு ஆனந்தம் உண்டாயிற்று. எப்படியாவது நரியைப் பிடித்து உண்ண வேண்டும் என்று தனக்குள் திட்டம் போட்டுக் கொண்டது. முதலையிடம் இருந்து தப்புவதற்கு நரி ஓர் உபாயம் போட்டது. ஆற்றின் கரையை அடைந்ததும், அது பலத்த சத்தமாய் அழுதது. இதனைக் கண்ட முதலை "நண்பரே! ஏன் அழுகிறீர்?" என்று கேட்டது. அதற்கு நரி "முதலையாரே! என் மனைவி இந்த ஆற்றினுள் இறங்கி மறைந்துவிட்டாள். அவளைக் காணாமல் ஏங்கித் தவிக்கிறேன். அவளைக் கண்டுபிடித்துத் தாரும்" என்றது. நரியின் பேச்சை நம்பிய முதலை, முதலில் ஆற்றில் மூழ்கிய நரியின் மனைவியைப் பிடித்துத் தின்போம், பின்னர் கரையில் நிற்கும் நரியைப் பிடித்து உண்ணலாம் என்று எண்ணியது. "நரியாரே! கவலை வேண்டாம் நான் உமது மனைவியைக் கண்டுபிடித்து வருகிறேன்' என்று கூறிவிட்டு, முதலை ஆற்றில் பாய்ந்து வேறு பக்கமாகத் தேடத் தொடங்கியது. இதுதான் தக்க தருணம் என்று எண்ணிய நரி ஆற்றில் இறங்கி வேகமாக மறு கரையைச் சென்றடைந்தது. முதலை ஆறு முழுவதும் தேடியும் நரியின் மனைவியைக் காணவில்லை. தந்திரமுள்ள நரி தன்னை ஏமாற்றிவிட்டது என்று பின்னர் அது உணர்ந்து கொண்டது.



**அருணகிரிநாதன் விஷ்ணுராஜா,**
தரம் 7,
யா/இந்து மகளிர் கல்லூரி.

*வார்த்தை விளையாட்டு – 12*
**சரியான விடைகள்**

இடமிருந்து வலம்

1. இந்தியா
4. லட்டு
5. கங்கை
7. விம்பம்
8. சடலம்
9. வலம்
10. சாண்
11. புரதம்

மேலிருந்து கீழ்

1. இலவசம்
2. விடுதி
3. யாகம்
6. கைம்பெண்
8. சம்பு
10. சாது

# உங்கள் கைவண்ணம்



**ர.ராஜாராம்**
தரம் - 7
யா/தேவரையாளி இந்துக் கல்லூரி,
கரவெட்டி.



**வே.மலர்வேணி**
தரம் - 10,
யா/கலாநிதி தியாகராஜா ம.ம.வி.,
காரைநகர்

# லேசர் ஒரு அறிமுகம்


*(கடந்த வாரத் தொடர்ச்சி)*

**லேசர்** ஆய்வுக்காக 1940ஆம் ஆண்டில் நியுயோர்க் - கொலம்பியப் பல்கலைக்கழகத்தின் இளம் ஆராய்ச்சியாளரான சாள்ஸ் டௌனஸ் இற்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. டௌனஸ் தனது ஆய்வின் உச்சக்கட்டமாக, நுண்ணலைகளைப் பயன்படுத்தி அணுவின் கதிரியக்கத்தை ஆராய முற்பட்டார். இதற்காக அவர் நுண்ணலைகளை விட அலை நீளம் குறைந்த அலைகளை உருவாக்க வேண்டியிருந்தது.

1951 இல் டௌனஸ் நுண்ணலைகளைப் பயன்படுத்தி, மூலக் கூறிலிருந்து மிகக் குறைந்த அலைவரிசை கொண்ட ஒளியை வெளியிடத் தூண்டினார். இதற்கு மேசர் (Maser) எனப் பெயரிடப்பட்டது. இத்தோடு, இவர் திருப்தியடையவில்லை. இவரது இலக்காக இருந்தது, குறைந்த அலை நீளம் கொண்ட கதிர்களை உருவாக்குவதேயாகும்.


1957 இல் இத்தகைய ஒளிக்கதிர்களை உருவாக்குவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை டௌனஸ் உணர ஆரம்பித்தார். இந்தக் கட்டத்தில் இந்தப் புதிய வழிமுறைக்கு இரேசர், லேசர், க்சேசர் முதலிய பெயர்கள் இடப்பட்டன. இறுதியில் லேசர் என்ற பெயர் நிலைத்து நின்றது.

1958 இல் டௌனஸ் மற்றும் ஆர்தர் ஸ்தேவ்லோ ஆகிய இரண்டு அறிஞர்களும் இணைந்து வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு கட்டுரையை வெளியிட்டனர். இக்கட்டுரை ஆய்வு, லேசர் தயாரிப்பு மற்றும் அதன் பண்புகளை விளக்கியது. இதையடுத்து அமெரிக்காவில் இப்புதிய தொழில் நுட்பமுறையை நடைமுறையில் கொண்டு வருவதற்குப் பலத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன.



1960 ஆம் ஆண்டு மே மாதம் ஹியூஸ் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் தியோடர் மெய்மான் என்பவர் செயற்கை வைர ஒளிப் பிரமாணியின் உதவியோடு லேசரை உருவாக்கினார். இதற்குச் சில ஆண்டுகள் கழித்து பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களையும் சேர்ந்த ஆய்வாளர்கள் புதிய லேசர் வகைகளை உருவாக்குவதில் வெற்றி கண்டனர். இதற்குப் 15 ஆண்டுகளின் பின்னர்கூட, லேசரை மக்களுக்குப் பயன்படும் வகையில் உபயோகப்படுத்துவதென்பது முடியாத காரியமாகவே இருந்தது.

முதலில் தயாரிக்கப்பட்ட லேசர் வகைகள் பயனில்லாததாக - விலை உயர்ந்ததாக இருந்தன. இவற்றை ஒரு ஆராய்ச்சி நிலையத்தில் பயன்படுத்தக் கூடியதாக இருந்ததே தவிர - அதை வெளியில் கொண்டு வந்து மக்களுக்குப் பயன்தரத் தக்க வகையில் பயன்படுத்துவது குதிரைக்கொம்பாகவே இருந்தது.



ஆனால் இன்று லேசர் கதிர்களை உருவாக்கும் கருவியைக் குண்டூசியின் தலையை விடச் சிறிய அளவில்கூட உருவாக்கிவிட முடியும். ஒளிப்பிரிப்புமானியின் எல்லாப் பாகங்களிலும் லேசரை உருவாக்க முடியும்.

லேசர் ஒளியின் தூய தன்மையால் - இதனைக் கொண்டு அணு மற்றும் மூலக் கூறுகள் குறித்துத் தெளிவாக ஆராயமுடியும். இது விஞ்ஞானிகளுக்குப் பெரும் துணையாக அமைந்தது.

ஒரு அணு கதிரியக்கத்தின் மிகச் சிறிய அளவான போட்டானை வெளியிடும் போது, ஏற்படும் அதிர்வு (Recoil) போன்ற மிகச் சிறிய செற்பாடுகளைக்கூட லேசரின் துணையுடன் அவதானிக்க முடியும்.

*(அடுத்த வாரம் தொடரும்)*

## உலக நாடாளுமன்றங்கள்

| நாடு | - | நாடாளுமன்றம் |
|---|---|---|
| அயர்லாந்து | - | டெப்ஸ் |
| அமெரிக்கா | - | காங்கிரஸ் |
| ஆப்கானிஸ்தான் | - | ஷோரா |
| ஒஸ்ரியா | - | பெடரல் அசெம்பிளி |
| அவுஸ்ரேலியா | - | பெடரல் நாடாளுமன்றம் |
| இங்கிலாந்து | - | பிரபுக்கள் சபை, மக்கள் சபை |
| இந்தியா | - | லோக்சபா, ராஜ்யசபா |
| ஈரான் | - | மஜ்ஜீலிஸ் |
| இஸ்ரேல் | - | நெசட் |
| ஐஸ்லாந்து | - | அல்திங்க் |
| கனடா | - | மக்கள் சபை, செனட் |
| சீனா | - | தேசிய காங்கிரஸ் |
| சுவிற்சர்லாந்து | - | பெடரல் அசம்பிளி |
| சுவீடன் | - | ரிக்ஸ்டாக் |
| டென்மார்க் | - | போல்கெட்டிஸ் |
| தென்னாபிரிக்கா | - | ஹவுஸ்ஒவ் அசெம்பிளி |
| துருக்கி | - | கிரான்ட் நாஷனல் அசெம்பிளி |
| நோர்வே | - | ஸ்டோர் டிஸ் |
| நியூசிலாந்து | - | பிரதிநிதிகள் சபை |
| நெதர்லாந்து | - | தி.ஸ்டேட்ஸ் ஜெனரல் |
| நேபாளம் | - | தேசிய பஞ்சாயத்து |
| பூட்டான் | - | சாங்டு |
| போலந்து | - | சீஜிம் |
| மலேசியா | - | தேவான் ரக்யத், நெகாரா |
| மியன்மார் | - | பெய்து ஹிட்டாவ் |
| ருமேனியா | - | தி கிரான்ட் நாஷனல் அசெம்பிளி |
| ரஷ்யா | - | சுப்ரீம் சோவியத் |
| லிபியா | - | பொதுமக்கள் காங்கிரஸ் |
| ஸ்பெயின் | - | கோர்டஸ் |
| ஜப்பான் | - | டயட் |
| ஜேர்மனி | - | புண்டஸ்டாக் (கீழ்சபை) புண்டஸ்ராட் (மேல்சபை) |

## இளந்தேனீக்கள் கழகம்

**நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?**

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
**267,நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர்:-
**துஷ்யந்தன் விதுஷன்**
கற்கும் பாடசாலை :-
யா/ இந்து ஆரம்ப பாடசாலை
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
ஆங்கிலம், விளையாட்டு, ரீ.வி பார்த்தல்



முழுப்பெயர்:-
**ஆ.சிந்துகா**
கற்கும் பாடசாலை :-
யா/ பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம், விளையாட்டு.




முழுப்பெயர்:-
**சி.சே.கிறிஸ்டீன் பானுமதி**
கற்கும் பாடசாலை :-
யா/ இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
ஆங்கிலக் கட்டுரை எழுதுதல், கவிதை எழுதுதல்.



முழுப்பெயர்:-
**சசிகரன் சத்தியோஜாதசர்மா**
கற்கும் பாடசாலை :-
விக்ரோறியாக் கல்லூரி
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.



முழுப்பெயர்:-
**சேரழகன் மதுசன்**
கற்கும் பாடசாலை :-
யா/ இந்து ஆரம்ப பாடசாலை
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
ஆங்கிலம், படங்கள் வரைதல், விளையாட்டு.



முழுப்பெயர்:-
**அ.றாஜீவன்**
கற்கும் பாடசாலை :-
யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
கணிதம், பொது அறிவு, பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர்:-
**சிறீஸ்கந்தராஜா அசோக்கமாலா**
கற்கும் பாடசாலை :-
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டுத்துறை, வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர்:-
**தருமரத்தினம் ஹரிஹரன்**
கற்கும் பாடசாலை :-
யா/இந்துக் கல்லூரி
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், கல்வித்துறை.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................
பிறந்த திகதி :........................................
ஆர்வமுள்ள துறைகள் :........................................
:........................................

................ ............................
திகதி ஒப்பம்

.......................... ..........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.

- *திருக்குறள்*

# நமது நோக்கு

## நியாயமற்ற நிபந்தனைகளால் நிலை தடுமாறும் சமாதானம்

யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றி, சுமூக வாழ்வை அவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதான முயற்சிகளுக்கு- எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாத நிபந்தனைகளை விதித்த இராணுவத்தின் திட்டவரைபை நிராகரித்திருக்கும் விடுதலைப்புலிகள் - இந்த நிபந்தனைகள் யாதார்த்தத்திற்குப் பொருத்தமற்றது என்றும் அறிவித்துள்ளனர்.

தமிழ் மக்கள் காலம் காலமாக வாழ்ந்து வரும் சொந்த பூமியில், அவர்களது வம்சம் ஆழவேரூன்றிய தாய் மண்ணில் வாழ்வதற்கு,

யுத்தத்தின் சத்தங்கள் ஓய்ந்த, நாடுமுழுவதும் சமாதானத்தின் பேறுகளை அனுபவித்து வரும் நிலையில், அகதி வாழ்வைத்தொலைத்து - நிம்மதியான, நிலையான சுமூக நிலையை அம்மக்களும் பெறவேண்டிய உரித்துடையவர்களாக இருக்கும்போது,

எமது நிலத்தை ஆக்கிரமித்து கையகப்படுத்தி வைத்திருப்தோடு மட்டுமல்லாது நாம் எமது மண்ணிலேயே வாழ்வதற்கும் நிபந்தனைகளை இராணுவம் விதிப்பது- எள்ளளவும் நியாயப்பாடற்றது என்பதை விடுதலைப் புலிகளின் நிராகரிப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதுபோல, பொதுமக்களது மீள் குடியேற்றத்திற்கு தமது இராணுவநலன் சார்ந்த நிபந்தனைகளையும், அழுத்தங்களையும் இராணுவம் முன்வைத்திருப்பதானது - சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் திட்டமிடப்பட்ட நகர்வே என்பது வெளிப்பாடாகின்றது.

இடம் பெயர்ந்து - வேதனைகள், விரக்திகள் மத்தியில் அவல வாழ்வு வாழ்ந்து வரும் மக்களை - நிபந்தனைகளின் பேரிலான மீள் குடியேற்றம் என்ற பெயரில் - இராணுவத்தின் கண்காணிப்புக்குள் திறந்தவெளிச் சிறைக் கைதிகளாக உருவாக்கும் சூழ்ச்சிப் பொறியாக,

மக்களை, தமது உயர் பாதுகாப்பு வலயங்களைத் தக்க வைக்கும் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தத் திட்டமிட்ட இராணுவத்தரப்பின் சுயரூபம் வெட்ட வெளிச்சமாகியிருக்கின்றது.

ஒருபுறம் அரசாங்கமானது சமாதான முயற்சிகளில் தீவிரமாக இறங்கியுள்ள அதேவேளை - இராணுவத்தரப்பின் இத்தகைய நிபந்தனைகள் விதிப்பு - சாண் ஏற முழம் சறுக்கும் நிலையாக மாறிவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணக்கம் கண்டு- இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கான உறுதிப்பாட்டிற்கு முற்றிலும் மாறான பக்கத்திலேயே இராணுவம் நின்று வருகிறது என்பது இதன் மூலம் உணர்த்தப்பட்டிருக்கிறது.

பரஸ்பரம் நம்பிக்கை தரவல்ல செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம், சமாதானத்திற்கான எதிர்பார்ப்பை உறுதியாக்க வேண்டிய தேவை அவசியமாகியுள்ள நிலையில், சற்றேனும் தளர்வு காட்டாத நிலைப்பாட்டை இராணுவம் அழுங்குப்பிடியெனப் பிடித்து வருவதானது - நிரந்தர சமாதானத்தை விட, தமது இராணுவ ஆதாயத்தையே படைத்தரப்பு முன்னிலைப்படுத்துவதையும்,

பேச்சுக்கள் மூலமும், கலந்தாலோசனைகள் மூலமும் பாதுகாப்பு விவகாரங்களில் - இசைவாக்கத்தையும், இணக்கப்போக்கையும் கொண்டு வரமுயலும் உபகுழுவின் செயற்பாட்டையும் அர்த்தமிழக்கச் செய்வதாகவே அமைந்துள்ளது.

பொதுமக்களது மீள் குடியேற்றத்திற்கும் சுமூக வாழ்க்கைக்கும் எவ்வகையிலும் தொடர்பற்ற, விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக்களைய வேண்டும் என்றதும், கனரக ஆயுதங்களைச் செயலிழக்கச் செய்யப் போவதுமான நிபந்தனைகள் பாதுகாப்பு வலயப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு தாம் சம்மதிக்கவே போவதில்லை என்ற இராணுவத்தின் பிடிவாதத்திற்கு துணைசேர்ப்பதாகவே அமைந்துள்ளது.


சமாதானத்தின் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு தனது நிபந்தனைகள் மூலமாக அச்சுறுத்தலை இராணுவம் தந்திருப்பதாகவே கருதமுடியும்.

இந்த முட்டுக்கட்டையை நீக்கி, இந்த அச்சுறுத்தலை அகற்றி - தான் சம்மதித்ததுபோல, விடுதலைப் புலிகள் இணக்கம் கண்டதற்கு இணங்க - இவ்விடயத்தில் அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

பெரும் முயற்சிகள் மூலம் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் நம்பிக்கைக் கோபுரம், இராணுவ - இராணுவ நலனை முன்னிறுத்திய, பிடிவாத நோக்கம் கொண்ட, விட்டுக் கொடுப்பில் ஆர்வமற்ற, சந்தேகங்களைத் தக்கவைத்த நிபந்தனைகள் மூலம் சிதறடிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உடனடிக் கவனம் செலுத்த வேண்டும். இதனாலேயே மீண்டும் ஒரு வரலாற்றுத் தவறைச் செய்த குற்றம் அரசாங்கத்தைச் சார வேண்டியதாகிவிடும்..

# பொ.ஐ.மு - ஜே.வி.பி. கூட்டணியை பொறுத்துக்கொண்டிருக்க முடியாது!

## பத்தேகம தேரர் சீற்றம்



(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பியுடன் கூட்டுச் சேருமேயானால், லங்கா சமசமாசக் கட்சி உடனடியாக பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து வெளியேறிவிடும் என்று, கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பத்தேகம சமித்த தேரர் தெரிவித்துள்ளார்.

சமாதானத்துக்கு விரோதமான ஜே.வி.பியுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டுச் சேர்வதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. பொதுஜன ஐக்கிய முன்னணி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் என்பதனாலேயே அதனுடன் லங்கா சமசமாசக் கட்சி கூட்டுச்சேர்ந்தது.

ஆனால் இப்போது சமாதானத்துக்கு எதிரான ஜே.வி.பியுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டுச்சேர முனையுமேயானால், அதை நாம் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது- கட்சியிலிருந்து விலகி விடுவோம் என பத்தேகம தேரர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் ஒன்றாக இணைய முடியாது. நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய தேசியக் கொள்கை எதுவும் இல்லாத ஜே.வி.பியோடு, பொதுஜன ஐக்கிய முன்னணி இணைவது சாத்தியமற்றது எனச் சமசமாசக் கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோனும் தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற எதிர்க்கட்சியின் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றிய பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி.மு.ஜெயரத்ன கருத்துத் தெரிவிக்கையில்,

பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் கூட்டுச் சேர்வது பற்றிய நடைவடிக்கைகள் இன்னும் ஆரம்பமாகவில்லை.

எனினும் - அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு எதிரான செயற்பாடுகளில் எதிர்க்கட்சிகள் ஒன்றாகவே செயற்படும் என்றார்.

# பிரமுக வங்கி ஊழியர்கள் லஞ்ச ஊழல் அதிகாரிகளால் விசாரணை

பிரமுக வங்கி உத்தியோகத்தர்கள் மீது லஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணை நடத்தி வருகின்றது.

இந்த வங்கியின் பல ஊழியர்கள் மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர் என்று மத்திய வங்கி முறையிட்டதன் பேரிலேயே, இந்தவிசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

பிரமுக வங்கியை மத்தியவங்கி அண்மையில் தடைசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மூன்றாக உடையும் நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மூன்றாக உடையும் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான அணியில் இருந்து வந்த, முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர் தாம் இருதரப்பிலும் இணையாமல் தனித்துச் செயற்படவுள்ளதாக அச்சுறுத்துவதனாலேயே, இந்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

எச்.எம்.ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோரே தாம் தனித்துச் செயற்படவுள்ளதாக அச்சுறுத்தியிருப்பதுடன், தம்முடன் மேலும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் என்றும், மூன்று அணிகளாகக் கட்சி உடையும் ஆபத்தைத் தோற்றுவித்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# புலிகளின் குரல் ஒலிபரப்பு இந்தியாவுக்கு கேட்காது!

## ஹிந்து பத்திரிகை தகவல்

(சென்னை)

புலிகளின்குரல் வானொலிக்காகப் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ள கருவிகளைப் பயன்படுத்தி, இந்தியாவில் கேட்கக்கூடியளவுக்கு ஒலிபரப்பை மேற்கொள்ளமுடியாது எனக் ஹிந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகளின் பேச்சாளர் ஒருவர் தமக்கு இதனைத் தெரிவித்ததாக செய்தி வெளியிட்டுள்ள ஹிந்து பத்திரிகை, இக் கருவிகள் இறக்குமதி எல்லாமே சட்டபூர்வமானதாக இருந்ததாகப் புலிகள் தெரிவித்ததாகவும்,

இக்கருவிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவுள்ள சிற்றலை ஒலிபரப்பு இந்தியாவுக்கு கேட்கக் கூடியதாக இருக்காது என்றும் தெரிவித்ததாகச் செய்தி வெளியிட்டுள்ளது.

# காஸ் விலை அடிக்கடி உயர்வு நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்குக

## பட்டி வீரக்கோன் கோரிக்கை

(கொழும்பு)

ஷெல் காஸ் நிறுவனம் அடிக்கடி காஸ் விலையை உயர்த்தி வருவது குறித்து ஆராய்வதற்காக, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று அமைக்கப்படவேண்டும் என்று லங்கா சமசமாசக் கட்சியின் தலைவரும், நடாளுமன்ற உறுப்பினருமான பட்டி வீரக்கோன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஷெல் காஸ் நிறுவனம் நேற்று முன்தினம் காஸ் சிலின்டரின் விலையை 31 ரூபாவினால் உயர்த்தியதை அடுத்து அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# வைகோவை விடுவிக்கும் மகஜரில் இளங்கோவன், குமரி அனந்தன் ஒப்பம்

## தமிழக காங்கிரஸ் கட்சியில் சர்ச்சை

(சென்னை)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினால் திரட்டப்பட்டு வரும் ஒரு கோடி கையெழுத்து மகஜரில் தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர்களான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், குமரி அனந்தன் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

'பொடா' சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ம.தி.மு.கவின் பொதுச்செயலாளர் வைகோவை விடுவிக்கக்கோரும் தமிழக அரசின் அராஜகச் செயல்களை நிறுத்தக்கோரும் ஒரு கோடி கையொப்பம் திரட்டும் இயக்கத்தை ம.தி.மு.க நடத்தி வருகின்றது.

இம்மகஜரில் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி ஒப்பமிட்டிருந்தார். இம்மகஜரில் காங்கிரஸ் கட்சியின் தமிழகத் தலைவர் இளங்கோவன் மற்றும் குமரி அனந்தன் ஆகியோர் கையொப்பமிட்டனர். இதையடுத்துத் தமிழகக் காங்கிரஸ் கட்சியில் பலத்த சர்ச்சைகள் தோன்றியுள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டே வைகோ தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு ஆதரவாக இளங்கோவன், குமரி அனந்தன் ஆகியோர் கையொப்பமிட்டது கட்சியின் கொள்கைக்கு விரோதமானது எனச் சர்ச்சைகள் கிளம்பியுள்ளன.

இதேவேளை, இளங்கோவன் இந்த மகஜரில் கையொப்பமிட்டது குறித்து ஜெயலலிதாவின் அ.தி.மு.க.வும் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரதேச செயலருக்கு இன்று பிரியாவிடை

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் கிளிநொச்சிக்கு மாற்றலாகிச் செல்வதையிட்டு, பிரதேசசெயலக நலன்புரிச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் இன்று பிரியாவிடை நடைபெறவுள்ளது. இவர் கிளிநொச்சி மேலதிக அரச அதிபராக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (100)

# ஈராக் மீதான அமெரிக்கப் போர் நகர்வுக்கு வடகொரிய விவகாரம் மேலும் ஒரு பின்னடைவா?

**பு**திய ஆண்டு பிறப்பதற்கு இன்னும் சில நாட்கள் இருக்கும் போது, மக்கள் அதனை வரவேற்கும் ஆரவாரிப்புடன் வீதிகளில் உலா வருகின்றார்கள். அதேபோல் இன்னோர் மக்கள் கூட்டமும் புதிய ஆண்டில் தொடங்கவுள்ள போருக்குத் தயாராகின்றது.

ஈராக்மீது போரைப் புதிய ஆண்டின் முதல் திங்களின் நடுப்பகுதியில் ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்களை அமெரிக்க - பிரித்தானிய கூட்டுப்படைகள் தொடங்கிவிட்டதாக ஊடகங்கள் பல, தகவல்களைப் பரப்பி வருகின்றன.

போர் தவிர்க்க முடி யாதது என அமெரிக்க ஆட்சியா ளர்களும் பிரிட்டன் பிரகிருதிகளும் பிரகடனங்களை மாறிமாறி வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். புஷ்ஷும் - பிளேயரும் சேர்ந்து உருவாக்கியுள்ள போரின் புதிய ஆண்டாக இரண்டாயிரத்திமூன்றை உலகம் வரவேற்கவுள்ளதாக ஊடகங்கள் நம்பிக்கையளித்து வருகின்ற வேளை, வடகொரியரும் அமெரிக்க ஆளும்வர்க்கத்திற்குப் புதிய போர்க்களம் ஒன்றைப் புதிய ஆண்டில் திறந்து விடவுள்ளனர் போல் தெரிகின்றது.

ஈராக் மீதான ஆயுதப் பரிசோதனையாளர் குழு, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்ஸிலின் பிரகடனத்தின் பிரகாரம் சென்றாலும், அமெரிக்க ஆட்சியாளரின் வற்புறுத்தலுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டவர்களாகவே நடக்க வேண்டியதாகியுள்ளது.

ஐ.நா.பொதுச் செயலாளர் எடுக்க வேண்டிய தீர்மானங்களையும் முடிவுகளையும் அமெரிக்க ஜனாதிபதி புஷ் எடுக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. பாதுகாப்பு கவுன்ஸில் ஐ.நா.சபைக்கு வழங்கிய பொறுப்புக்களைப் புஷ் தனது விருப்பத்திற்கு ஏற்ப, தான்தோன்றித்தனமா கக் கையகப்படுத்தியுள்ளார். எப்படியாவது அணுவாயுதங்களையும், உயிரியல் ஆயுதங்களையும் ஈராக் தயாரித்துக் கொண்டிருக்கின்றது என்பதற்கான தடயத்தைக் கண்டறியுமாறு புஷ் ஆயுதக் கண்காணிப்பாளரைக் கோரியிருந்தார்.

ஈராக்கியர் அணு ஆயுதங்களைத் தயாரித்தார்கள் என்பதற்கான ஆதாரத்தைக் கண்காணிப்புக் குழுவினரால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதன் பின்னர், புஷ்ஷிற்கும் அமெரிக்கப் படைகளுக்கும் ஈராக்கில் என்ன வேலை இருக்கின்றது என்பதுதான் தற்போதைய கேள்வி. ஒரு கட்டத்தில், புஷ் தனது உளவுப்பிரிவினரைப் பரிசோதனையாளர்களோடு இணைந்து பணியாற்ற அனுமதிக்குமாறு ஈராக்கினைக் கேட்டிருந்தனர். ஈராக்கியர் அதற்கு அனுமதி அளித்த கையோடு, உலகை ஆளும் அமெரிக்க ஜாம்பவான்கள் சிறு பிள்ளைத்தனமாக அறிக்கை விட்டார்கள்.

அதாவது அத்தகைய ஆயுதங்கள் உண்டா? இல்லையா? என்பதனைக் கண்டறியும் பொறுப்பு ஈராக்கியருக்கும், சதாம் உசைனுக்கும் உரியது, அமெரிக்கர்களுக்கு அல்ல என வெளிவிவகார அலுவலகம் அறிக்கைவிட்டது. இக்கோரிக்கையை விடுத்ததும் அமெரிக்க ஆளும்வர்க்கம்தான். அதனை நிராகரித்ததும் அவர்களேதான்.

இது அமெரிக்கர்களின் அரசியல் வங்குரோத்துத் தனத்தையே காட்டுகின்றது. அமெரிக்க-பிரித்தானிய ஆளும் வர்க்கத்தினரைப் பொறுத்தவரை, ஈராக் மீது போர் தொடுப்பதே அவசியமானது என்ற முடிவை ஏற்கனவே எடுத்து விட்டார்கள். அதன் காலத்தைப் பிற்போட்டதில் ஐ.நா.பாதுகாப்புக் கவுன்ஸிலுக்கும் குறிப்பாகப் பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுக்கும், சதாம் உசைனின் ராஜதந்திர அணுகுமுறைக்கும் பங்கு உண்டு. அதனை முறியடிக்க அமெரிக்க - பிரிட்டன் கூட்டு ஆளும்வர்க்கம் தற்போது பயன்படுத்துவதோ அயோக்கியத்தனமான அரசியல் அணுகுமுறையேயாகும்.

அமெரிக்கா போருக்குரிய தயாரிப்புகளில் கணிசமான நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்துவிட்டது. போர்ப் பயிற்சிகளை மேற்கு ஆசியாவின் பாலைவனப் பிரதேசங்களிலும் அதன் பகுதிகளிலும் மேற்கொண்டு வருகின்றது. அராபியக் கடல் மற்றும் இந்து சமுத்திரக் கடற் பிரதேசத்திலும் ஒத்திகையைப் பூரணப்படுத்தி வருகின்றது. மேலும் ஒரு லட்சம் துருப்புக்களை அமெரிக்கா மட்டும் ஈராக்கை அண்டிய யுத்த தளங்களுக்கு நகர்த்திவிட்டது. நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் விமானம் தாங்கிக் கப்பல்கள், ஏவுகணைகள் பொருத்தப்பட்ட கப்பல்கள் எனக் கடற்படைத் தயாரிப்புக்கள் பலவற்றை அமெரிக்கா பூர்த்தி செய்து வருகின்றது.



போர்ப்பயிற்சியில் அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பல்

அமெரிக்கா ஈராக் மீதான போருக்கு அதிகளவில் விமானப் படைகளையும், கடற்படைகளையும் பயன்படுத்தலாமென நம்பப்படுகின்றது. ஆரம்பத்தில் நகரங்களை இலக்கு வைத்துத் தாக்குதலை நிகழ்த்துவதன் மூலம், முறியடிப்பைச் சாதகமாக ஆக்க முயற்சித்தாலும் அதிக உயிரிழப்பு ஏற்படும் என்பதனால், தென் ஈராக் பிரதேசத்திலிருந்து போரை நடாத்தத் திட்டமிட்டு வருகின்றது என ஊகங்கள் நிலவுகின்றது.

அமெரிக்கா, பிந்திய தயாரிப்பாக விளங்கும் B12 விமானத்தைப் பயன்படுத்துமெனவும், ஆப்கானிஸ்தானில் இதன் பயன்பாடு அதிகமாக அமைந்ததாகவும் தெரியவருகின்றது. ஆப்கானிஸ்தான் மலைப் பகுதியையும், வனப்பிரதேசங்களையும் கொண்டிருந்ததுபோல், ஈராக் பிரதேசம் பாரிய வெளிகளையும், பாலைவனங்களையும் கொண்டிருப்பதனால் ஏறக்குறைய இயற்கை அமைப்புக்கு எதிரான- விமானங்களும், ஆயுதங்களும் பயன்படுத்தப்பட அதிக வாய்ப்புக்கள் உண்டு.

ஈராக் போர், அமெரிக்க இராணுவத்திற்கு இரண்டாவது இயற்கை அமைப்புக்கு எதிரான போர் அனுபவமாக அமையும். இத்தகைய அனுபவம் ஆசியப் பிரதேசங்களில் அமெரிக்கப் படைகள் நன்கு பயிற்றப்பட்டதாக மாற்றமடைவதுடன் எதிர்காலத்தில் ஆசியா நோக்கிய படையெடுப்புக்கு வாய்ப்பும், அனுபவமும் கிடைத்துவிடும். இது அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் எதிர்கால நட வடிக்கைகளை இலகுபடுத்துமெனவும் நம்பப்படுகின்றது.

போருக்கு எதிரான உணர்வுகள் தனித்து ஆசியாக் கண்டத்து நாடுகளிடம் மட்டுமல்ல ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக் காவிலும் அதிகமாக எழுச்சி கண்டு வருகின்றது. போப்பாண்டவரின் கிறிஸ்மஸ் செய்தியிலும் போருக்கு எதிரான உணர்வே பிரதிபலித்திருந்தது. எதையும் அமெரிக்க அதிபர் காதுகளில் வாங்கிக் கொள்வதாக இல்லை. மாறாக, உலகம் புஷ்ஷின் பிரகடனங்களை வாங்கிக் கொள்ள வேண்டுமென்பதே அவரது அவாவாக உள்ளது. தற்போது சதாம் உசைனை நம்ப முடியாது என அறிக்கை விடுமாறு, ஐ.நா.கண் காணிப்பாளர்களை அவர் கோரியுள்ளார்.

அமெரிக்கா போருக்கான தயார்படுத்தல் அனைத்தையும் நிறைவு செய்து கொண்டிருக்கும்போதே எதிர்ப்புக்களும், ஐ.நா.வின் தீர்மானத்துக்குக்கான முக்கியத்துவமும் அதிகரித்துக் கொண்டுவருகிறது. புதிய ஆண்டு ஜனவரி முற்பகுதியிலேயே ஆயு தப்பரிசோதனைக்குழு ஈராக்கிய அறிக்கை பற்றிய விவாதத்தினை நடாத்துவதுடன், நிரந்தர உறுப்புரிமை அல்லாத நாடுகளிடம் அவ்வறிக்கை கைமாற்றப்படவுள்ளது.

எனவே ஐ.நா. சபைத் தீர்மானத்தைக் காலதாமதிப்பதும், ஆயுதப் பரிசோதனை மந்தகதியடைவதும் ஈராக் மீதான போரைத் தவிர்க்க உதவுமென்ற ஊகங்களும் இல்லாமலில்லை. ஆனால், இத்தகைய நகர்வுகளால் அமெரிக்காவின் அதிருப்திப் போக்கும் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தி விடும் எனவும் நம்பப்படுகின்றது.

இவ்வாறு ஐ. நா. சபையினர் திட்டமிட, அமெரிக்காவோ போர் ஆயத்தத்தினை நிறைவேற்றுவதில் குறியாக உள்ளது. ஏனெனில், போர்த் தயார்படுத்தல் பாதுகாப்புச் சபையின் ஏனைய நாடுகளை நிர்ப்பந்திக்க வாய்ப்பைக் கொடுப்பதுடன், அடிபணிவை ஏற்படுத்தலாமெனக் கணக்கும் போடுகிறது.



அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் கொலின் பவல் ஜனாதிபதி புஷ்ஷுடன்.

ஆனால், அத்தகைய சூழல் எப்படி அமெரிக்காவுக்குச் சாதகமான வெற்றியை ஏற்படுத்துமென்பது கேள்விக்குரியதே. அத்தகைய நிர்ப்பந்தம் உருவாக முன்பு, மீண்டுமொரு புதிய களம் அமெரிக்காவின் வருகைக்காகக் காத்திருக்கின்றது. அதுவே வடகொரிய ஆயுத விவகாரமாகும்.

அமெரிக்கவின் வெளி விவகாரச் செயலாளர் கொலின் பவல் வாஷிங்டனின் ஈராக் மீதான கவனம் வடகொரியப் பக்கம் திசைதிரும்பப்போகிறது என்று கூறியுள்ளமை கவனத்திற்குரியது. வடகொரியாவின் வெளிப்படையான அறிவிப்பும் 1994 ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையை மீறுவதாகவும் அமைந்துள்ளது.

வெளிப் படையாக ஐ.நா.வின் கண்காணிப்புக் கமராவை அகற்றியுள்ளமை, வடகொரியாவின் அரசியல் ராஜதந்திர வலுவைக் காட்டுகின்ற அம்சமாக உள்ளது. இது அமெரிக்காவின் போர் ஆயத்தத்தினைப் பாதிக்கும் விடயமாகவே அமையவுள்ளது. இரண்டு பிராந்தியங்களிலும் அமெரிக்கா எடுக்கும் தீர்மானத்தினால் ஈராக் மீதான போர்ப் பிரகடனத்தைச் சரிவரக் கையாளத்தவறலாம் என ஊடகங்கள் தகவல்களை வெளியிடுகின்றன.

எனவே, போர்ப் பிரகடனத்திற்கு மேலும் ஒரு பின்னடைவாக வடகொரிய விவகாரம் மாறலாம். ஏற்கனவே கொரியக் குடாவில் அமெரிக்க ஆளும்வர்க்கம் நிறைய அனுபவங்களைக் கற்றுள்ளது. அதனை மட்டும் இலக்காகக் கொள்ளாத நிலையில் - அமெரிக்கா, வடகொரியா மீது நடவடிக்கையை எடுக்க துணியுமேயானால் ஆபத்தானநிலையை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். வடகொரியா பெருமளவுக்குச் சீனாவின் பின் புலத்தைக் கொண்டிருப்பதுடன் அண்மைக்காலத்தில் ரஷ்யாவினது ஒத்துழைப்பையும் உதவியையும் தேடிக்கொண்டது. இதனால் அணுவாயுத விருத்தியை அடையக்கூடிய பலத்தைச் சீனா அல்லது ரஷ்யா வழங்கும் நிலையிலேயே அமெரிக்காவுக்கான நெருக்கடியை அளவீடு செய்தல் வேண்டும். அதாவது, இரண்டு அரசுகளின் பின்புலம் இல்லாது வடகொரியா இவ்வாறான தீர்மானத்தினை உடனடியாக முன்னெடுக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்காது.

அத னால், வடகொரிய விவகாரத்தினைத் தான்தோன்றித்தனமான நடவடிக்கை என்று முடிச்சுப் போட்டுவிடமுடியாது. ஈராக் யுத்தத்திற்கு முன்பு தொடங்கப்பட்ட இவ்விவகாரம் ஆபத்தான சூழலை அமெரிக்கர்களுக்கு உணர்த்தவுள்ளது.

ஏற்கனவே அமெரிக்கா அண்மையில் தயாரித்த **Anty Ballestic Missile** வகைசார்ந்த **NMD** திட்டத்தையும் **(National Missiles Defence)** அதன் பரிசோதனையையும் சீனா பலமாகக் கண்டித்துள்ளது. சீனா தனது **ABM** வகை ஏவுகணைகளை அதிகரிக்கப் போவதாக அறிவித்துள்ளதுடன் அவ்வகை ஆயுதங்களை மீளவும் உற்பத்தி செய்வதற்கான தொழில் நுட்பத்தைப் பிறநாடுகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்போவதாகவும் தெரியப்படுத்தியுள்ளது.

எனவேதான், வடகொரியாவின் அணுவாயுத விவகாரத்திற்கும் சீனா - ரஷ்ய கூட்டுக்கும் தொடர்பிருக்க வாய்ப்பிருப்பதாகக் கருதப்படுகிறது. 1972இல் அமெரிக்கா, முன்னாள் சோவியத் யூனியனுடன் செய்து கொண்ட **ABM** உடன்படிக்கையைத் தன்னிச்சையாக மீறியத னால் ஆத்திரம் அடைந்த ரஷ்யா, மாற்றுவழியாக அணுவாயுதத்தினை மீண்டும் ரஷ்யா எடுக்கும் நிலைக்குத் தள்ளுமென எச்சரித்துள்ளது. இதுவே வடகொரியாவின் அணுவாயுதத் திட்டத்திற்கு சீன - ரஷ்யக் கூட்டின் உதவியில் தங்கியிருக்கலாமென நம்பமுடிகின்றது.

தென்கொரியாவில் நிகழ்ந்த புதிய ஜனாதிபதியின் வருகை யும் அவர் அமெரிக்காவுடன் கொள்ளவுள்ள இராணுவத் தொடர்பும் வடகொரிய அணுவாயுதத்திட்டத்திற்குக் காரணமாகக் கொள்ளப்பட்டாலும் அவை முழுமையான காரணங்களாக ஏற்றுக் கொள்ளமுடியாது. மாறாக முழு உலகத்திலும் அமெரிக்கத் தலையீட்டின் அபாயம் தடுக்கப்பட வேண்டும் என்பதற்கான முன்னாயத்தமாகக்கூட இதனைக்கருதமுடியும்.

எனவே வடகொரிய விவகா ரம் ஈராக் மீதான அமெரிக்கப் போரைக் காலதாமதப்படுத்தவோ, அல்லது நெருக்கடிக்குள்ளாக்கவோ ஏற்படுத்தப்பட்ட புதிய தற்காப்பு உத்தியாகும். இதனை ஒரேநேரத்தில் அமெரிக்கா எதிர் கொள்ளாது, பகுதி பகுதியாக எதிர்கொள்ளத் தயாராகுமேயாயின் - வடகொரியா அணுவாயுதத்தைத் தயாரித்துவிடும் அல்லது ஈராக் போர் உத்திக்கான வழி முறைகளில் வெற்றிகண்டுவிடும்.

அதனால் இரண்டையுமே ஒரே நேரத்தில் எதிர்கொள்ள வேண்டிய நிலையே அமெரிக்கா வுக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால் அது சாதகமான முடிவை எதிலும் ஏற்படுத்தமுடியாத நிலைக்கு அமெரிக்கரைத் தள்ளிவிடலாம்.

**கே.ரி.கணேசலிங்கம்**

### அணுவாயுத திட்ட விவகாரம்

# அமெரிக்க அழுத்தத்திற்கு வடகொரியா எச்சரிக்கை

வடகொரியா தன் மீது அணுவாயுத் திட்டம் தொடர்பான அழுத்தத்தினை அமெரிக்கா பிரயோகிப்பதனை கடுமையாக எச்சரித்துள்ளது. இவ்விடயமானது அமெரிக்காவிற்கும் தமது நாட்டிற்கும் இடையிலான ஆபத்து மிக்க தீவிரமான முரண்பாடுகளை தோற்றுவிக்கும் என வடகொரியா தெரிவித்துள்ளது.

தற்பொழுதுள்ள சர்வதேச விவகாரங்களின் படி அமெரிக்கா ஈராக்குடன் மட்டுமே இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடும் என அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனாட் ரம்ஸ்வீல்ட் தெரிவித்துள்ளார். எனினும் சர்வதேச சமூகம் வட கொரியாவிற்கும் அமெரிக்காவிற்கும் யுத்த அபாயம் உள்ளதாக அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

தென்கொரியாவில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ரோமூ கைறன் இருநாடுகளுக்கும் இடையில் சமரச முயற்சியில் இறங்கியுள்ளதுடன் வடகொரியாவை அமைதியான வகையில் விடயத்தினை கையாளும்படிக் கேட்டுக் கொண்டுள்ளார்.



ஐ.நா வின் கண்காணிப்புகருவியை வட கொரியா அகற்றியது

## அகதிகள் விடயத்தில் பிரிட்டன் அனுசரித்துச் செல்லவேண்டும்

### யூ.என்.எச்.சீ.ஆர் கோரிக்கை



பிரான்ஸ் ஊடாக நுழையும் அகதிகள்

(லண்டன்)

பிரிட்டனில் புகலிடம் கோருவோரின் தொகை அதிகரித்துள்ளதாக அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகராலயப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். பிரிட்டனின் சர்வதேச பிரபல்யமே இந்நிலைக்கு காரணம் என அவர் கூறியுள்ளார்.

எனினும் புகலிடம் கோருவோர் தொடர்பாக ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் பிரிட்டனும் ஒத்துழைத்து அகதிகள் தொடர்பாக மிருதுவான போக்கை கடைபிடிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

## பாதுகாப்பு வலயம் அமைக்க இஸ்ரேல் ராணுவ நடவடிக்கை

(டெல்அவிவ்)

மேற்குகரையில் இஸ்ரேல் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளில் 7 பலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் ஐவர் பலஸ்தீனப் போராளிகள் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இந்நடவடிக்கையில் ஐந்து இஸ்ரேலியப் படையினர் காயமடைந்தனர்.

யூதக்குடியேற்றங்களை சுற்றி பலஸ்தீனர்கள் நுழையாதபடி ஒரு பாதுகாப்பு வலயத்தை உருவாக்குவதே இந்நடவடிக்கையின் நோக்கம் இதன் போது சுமார் பத்து பலஸ்தீனர்கள் மற்றும் பெத்தலகேமில் உள்ள பலஸ்தீன உளவுத்துறை அதிகாரி ஆகியோரை தாம் கைது செய்துள்ளதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

## தேவாலயத்தாக்குதல் மதகுரு கைது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் கிறிஸ்மஸ் தினத்தன்று தேவாலயமொன்றில் நடைபெற்ற தாக்குதலைத் தொடர்ந்து இஸ்லாமிய மதகுரு உட்பட நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாக்கிஸ்தானின் மத்திய பஞ்சாப் மாநிலத்தில் உள்ள தேவாலயத்தில் நடைபெற்ற தாக்குதலினால் 3 இளம் பெண்கள் பலியானதுடன் 12 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலுக்கு இந்தியாவின் நிர்வாகத்திற்கு உட்பட்ட காஸ்மீரில் பிரிவினை கோரி போராடும் இஸ்லாமிய அமைப்பான ஜ-சி முகமட் அமைப்பே காரணம் என நம்பப்படுகிறது.

## பீகாரில் ஏழு பேர் பலி

(புதுடெல்லி)

இந்திய பீகார் மாநிலத்தில் இடதுசாரி ஆயுதபாணிகள் நடத்திய தாக்குதலில் பெண்களும் சிறுவர்களுமாக 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர். புதன் இரவு இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது.

## மிக் வீழ்ந்து நொருங்கியது

(புதுடில்லி)

இந்திய விமானப்படையின் மிக் விமானம் ஒன்று காஷ்மீர் பகுதியில் வீழ்ந்து நொருங்கியதில் ஒருவர் பலியானார். இந்த மிக் - 21 ரக விமானத்தில் இருந்த விமானி பரசூட் மூலம் குதித்து உயிர் தப்பியுள்ளார்.

விமானம் வீழ்ந்ததற்கான காரணம் தெரியவில்லையாயினும் இது நிச்சயமாக சுட்டு வீழ்த்தப்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானம் ஒரு வீட்டின் மீது வீழ்ந்ததில் வீட்டு உரிமையாளர் பலியானார். அவரின் மகன் படுகாயமடைந்தார்.

## இன்றைய நாள் இனிய நாள்

### 28-12-2002 - சனிக்கிழமை

சித்திரபானு வருடம் - 13ஆம் திகதி - சனி.
நட்சத்திரம் :- அத்தம் - இரவு - 1.56 வரை அதன்மேல் - சித்திரை
திதி :- அபரபட்ச நவமி - பி.ப - 1.47 அதன்மேல், தசமி

**மேடம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, புதியகடன் வசதி, எதிரி தலைமறைவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை..

**இடபம்** :- தேகசுகக்குறைவு, வைத்தியச்செலவு, சமூகசேவையில் ஈடுபடுவது நன்றல்ல, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

**மிதுனம்** :- வீட்டில் பெண்கள் தேகசுகக்குறைவு, கொடுக்கல் வாங்கல்கள் சிக்கல், வீட்டில் செலவு, வாகனச்செலவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, புதிய காரியம் வெற்றி, பெண்கள் உளப்பூரிப்பு, கல்வி முன்னேற்றம்.

**சிங்கம்** :- வரவுக்கு மிஞ்சிய செலவு, சேமிக்கும் சிந்தனை இல்லை, மனச்சஞ்சலம், வாக்குவாதம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- தேகசுகம் நன்று, பணவரவு, விருந்துபசாரத்தில் மகிழ்வு, கணவன் மனைவி உளப்பூரிப்பு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- தேகசுகக்குறைவு, வீண்செலவு, எடுத்தகாரியம் தடை, அயலில் மனஸ்தாபம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, தெய்வதரிசனம், செய்தொழில் லாபம், கல்வி முன்னேற்றம், வியாபார சமநிலை.


**தனு** :- தேகசுகம் நன்று, பணவரவு, தொழிற்சிறப்பு, செய்தொழில்லாபம், கல்வயில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

**மகரம்** :- தேகசுகம் நன்று, பிதாவுடன் மனஸ்தாபம், எதிரி தொல்லை, தேவையற்ற பயம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றம்.

**கும்பம்** :- தேகசுகக்குறைவு, தூரப்பிரயாணம், புதிய காரியம் தவிர்க்கவும், தேவையற்ற பயம், கல்வியில் முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**மீனம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, அறுசுவையுண்டி, கௌரவம், பெண்கள் உளப்பூரிப்பு, சுற்றுலா மகிழ்வு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.


## செய்திப் படங்கள்



ஈராக் மீதான நடவடிக்கைக்காக மத்திய தரைக் கடலுக்கு புறப்பட்ட அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல் யூ.எஸ்.எஸ். ஹரிட்ருமன் 'பிரான்ஸ் துறைமுகத்தில் தங்கி நிற்கும் போது எடுக்கப்பட்ட படம்.



வாரனாசியில் நடைபெறும் அகில இந்திய அலிகள் மாநாட்டில் கலந்து கொண்ட அலிகள் சிலர் மகிழ்வுடன் நடனமாடும்காட்சி. அலிகள் மாநாடு மூன்று நாட்களுக்கு நடைபெறுகிறது..



பெத்தலகேம் நேட்டிவிட்டி தேவாலயம் அருகே இஸ் ரேல், இராணுவச் சோதனைச்சாவடியை மீண்டும் அமைத்துள்ளது. நத்தார் தினத்தன்று இப்பகுதியிலிருந்து இஸ்ரேல் இரா ணுவம் வாபஸாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.



இஸ்ரேல் இராணுவம் சுட்டுக்கொன்ற ஹமாஸ் தீவிரவாதி ஒருவரின் சடலம் ஊர்வலமாக நேற்று காஸாவில் எடுத்துச் செல்லப் படும் காட்சி. யூதக் குடியேற்றம் ஒன்றின் அருகில் அமைக்கப்பட்டிருந்த இஸ்ரேல் இராணுவ நிலைக்குள் ஊடுருவிய போதே இவர் கொல்லப்பட்டார்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# யாழ். ஆஸ்பத்திரியில் ஒட்சிசன் தட்டுப்பாடு

## காய்ச்சலினால் பீடிக்கப்படுவோர் அதிகரிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒட்சிசனுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த மாதம் முதல் குடாநாட்டில் பரவி வரும் காய்ச்சலினால் வைத்தியசாலையில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படும் இவர்களுக்கு அதிகளவான ஒட்சிசன் தேவைப்படுகிறது. இதனாலேயே ஒட்சிசன் பற்றாக்குறை ஏற் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து எடுத்து வரப்படும் ஒட்சிசன் சிலிண்டர்கள் போதியளவாக இருக்கவில்லை எனவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அடிக்கடி தெரிவித்தும் இன்னமும் பலன் கிடைக்கவில்லை என அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

# புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் ஜனவரி 6 இல்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 2001/2002 ஆம் ஆண்டுகளில் தோற்றி, பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்ற மாணவர்களுக்கான விரிவுரைகள் அடுத்த மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

கடந்த 2002 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதிக்குரிய Z (இசற்) வெட்டுப்புள்ளி அண்மையில் பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டது.

இதேவேளை இவ் வெட்டுப் புள்ளியின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்குரிய கடிதங்களைப் பல்கலைக்கழக ஆணைக் குழு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெட்டுப்புள்ளிகளின் பிரகாரம் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு 25 சிங்கள மாணவர்கள் அனுமதிக்கப் படுவர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் டாக்டர் ரஞ்சித் மெண்டிஸ் தெரிவீத்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் திகதி முதல், இரு வருட மாணவர்களுக்கு வகுப்புக்கள் ஒன்றாக ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# 4 இலங்கையர் தனுஷ்கோடியில் கைது

இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்த நான்கு இலங்கையர்கள் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்தின் பல பகுதிகளிலும் இருந்து 10பேர் படகில் இலங்கைக்குச் செல்வதற்காகத் தனுஷ்கோடி பிரதான வீதியில் காத்திருந்த சமயமே நால்வர் கைதாகியுள்ளனர். ஏனைய ஆறு பேர் தப்பியோடி விட்டனர். தப்பியோடியவர்களை பொலிஸார் தேடிவருகின்றனர்.

# விபத்தில் சிக்கியவர் மரணம்

(வண்ணை)

கடந்த நத்தார் தினத்தன்று ஆனைப்பந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்- உழவுஇயந்திர விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர், சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று அங்கு மரணமானார். சுன்னாகத்தைச் சேர்ந்த அருளானந்தம் ஜெயசீலன் (வயது 34) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (111,60)

# சமஷ்டித் திட்டத்தின் கீழ் இரு பிரதமர்கள் இல்லை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சமஷ்டி அமைப்பின் கீழ் இரண்டு பிரதமர்கள், இரண்டு இராணுவத் தளபதிகள் என ஒரு போதும் நியமிக்கப்படமாட்டார்கள். சில கட்சிகள் சமஷ்டி தொடர்பாக உணர்ச்சிக்கு இடம் கொடுக்கும் கருத்துக்களை வெளியிடுகின்றன என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், சமஷ்டி நாட்டை பிளவுபடுத்தும் அமைப்பல்ல, பிளவுபடுவதைத் தடுப்பதற்கான அமைப்பு. இது ஓர் அதிகாரப் பகிர்வுத் திட்டமே என்றும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# ஹஷான் திலகரட்ன மீண்டும் அணிக்கு தெரிவு

(கொழும்பு)

அடுத்த வருடம் நடைபெற இருக்கும் உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் இலங்கை அணியில் சேர்ந்து கொள்வதற்காகத் துடுப்பாட்ட வீரர் ஹஷான் திலகரட்ன கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் அழைக்கப்பட்டுள்ளார்.

39 வயதான திலகரட்ன இலங்கை அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கிரிக்கெட் கட்டுப்பாடடுச் சபை தெரிவித்துள்ளது.

2003ம் ஆண்டில் நடைபெற இருக்கும் உலகக்கிண்ணச் சுற்றுப் போட்டியின் ஆரம்ப ஆட்டம் பெப்ரவரி மாதம் 10ம் திகதி இடம் பெறும். இச்சுற்றுப்போட்டியில் விளையாடஅரவிந்த டி சில்வாவும் அழைக்கப்பட்டுள்ளார்.

# அமைச்சர் விஜயம் ரத்து

(கொழும்பு)

இன்று யாழ்ப்பாணம் வரவிருந்த கல்வியமைச்சர் கருணசேன கொடித்துவக்கின் விஜயம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஐந்து லாம்புச் சந்தியில் மேலும் ஒரு சடலம் மீட்பு

(கொழும்பு)

பெரும் தீ விபத்து நடைபெற்ற ஐந்து லாம்புச் சந்தியிலிருந்து மேலும் ஒரு சடலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

மறைவிடம் ஒன்றில் காணப்பட்ட இச்சடலம் தொடர்பான பிரேத பரிசோதனை இன்று நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.(200)

### பாதுகாப்பு ...

களாக உள்ள நிலையில் குறிப்பாக பலாலி, காங்கேசன்துறைப் படை நிலைகளைப் பாதுகாக்க, பாதுகாப்பு வலயங்கள் அவசியம் என ஜனாதிபதி கருதுவதாகவும் அவரின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

### சிபாலின்...

நடாத்தியிருந்தார். இந்திய வெளியுறவுச் செயலரின் விசேட அழைப்பின் பேரிலேயே கடற்படைத் தளபதி தயா சந்தகிரி இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.

அதேவேளை- விடுதலைப் புலிகளின் கடற்போக்குவரத்துத் தொடர்பாக, இந்திய உயர்படை அதிகாரிகளுக்கும் சந்தகிரிக்குமிடையில் அடிக்கடி உரையாடல்கள் இடம் பெற்று வருவதாகவும், மிக விரைவில் இந்திய, இலங்கைப் படைகள் கூட்டாக இணைந்து தயாரிக்கும் திட்டம் ஒன்றின் அடிப்படையில் கடற்கண்காணிப்பு மேற்கொள்ளப் படும் என்றும் அங்கிருந்து எமக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (200)

### மணலாறில்...

பட்டார். காவல்துறையினர் இச்சிப்பாயை கிளிநொச்சியில் தமிழீழ நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். நீதிவான் க. செந்தூரன் இவரை அடுத்த மாதம் 10 திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டிருக்கிறார்.

### ஜனாதிபதி...

தார் என்றும் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி சி.ஐ.டியினருக்கு சாட்சியமளித்தார்.

இதைத் தொடர்ந்து, இவ்விசாரணையை தொடர்ந்து மேற்கொள்வது எவ்வாறு என்பது பற்றி மேலதிகாரிகளுடனும், சட்டமா அதிபருடனும் விசாரணை அதிகாரிகள் தொடர்பு கொண்டு கலந்தாலோசனை செய்து வருகின்றார்.

எனினும் ஜனாதிபதி சந்திரிகா இது குறித்து அறிக்கை ஏதும் வெளியிடாத வரையில் தம்மால் அவரை விசாரிக்க முடியாது என பொலிஸ் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. (01)

### வானொலி...

காவிடம் வரிச்சலுகைகளை எதிர்பார்த்திருந்த போதும் உரிய முறையில் அனைத்து வரிகளையும், உரிய முறைப்படி செலுத்தியே விடுதலைப் புலிகள் வானொலி உபகரணங்களைக் கொள்வனவு செய்திருந்ததாகவும், ஊடகமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (01)

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.42 | 96.85 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 154.21 | 155.58 |
| 1 யூரோ | 99.72 | 100.91 |
| 1 சுவிஸ் பிராங் | 68.46 | 69.52 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 53.97 | 54.94 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.79 | 25.79 |

ஸ்ரார்கல்விநிலையம்
சுன்னாகம்
(A/L2005
கலை, வர்த்தக,
கணித
வகுப்புக்கள்)
(076)
ஆரம்பம் 05-01-2003
ஞாயிறு 3.00 மணி

A/L
2005
கலை,
வர்த்தக
பிரிவுகள்
ஜனவரி - 4
சனிக்கிழமை
காலை- 8.00 மணி
DMI
யாழ்.நகர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.